உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்



சிறப்பு மலர்

# திவ்யதேசங்களும் சிறப்புகளும்

## மதுரை சித்திரை திருவிழா சிறப்பிதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

# பசியாற்றும் சேவை பரமனுக்கு செய்யும் சேவை

## மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட்



மதுரையின் அட்சயப்பாத்திரம் டிரஸ்ட்
இயன்றவரை உதவுவோம்..
இல்லாதவர்களுக்கே
94426 30815

மதுரையில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக 1000 நாட்களைக் கடந்து ஏழை, எளியோர், ஆதரவற்றோர், சாலையோரத்தில் இருப்பவர்களுக்கு சூடான உணவை நேரடியாக கொண்டு சேர்த்து வருகிறோம். சமூக சமையலறைகள் முதல் உணவு வங்கிகள் வரை உருவாக்கி, ஏராளமான தன்னார்வலர்களின் ஒத்துழைப்புடன் உணவு வழங்கும் சேவையை தொடர்ந்து வருகிறோம். இதன் மூலம் ஒரு சமூக மாற்றத்திற்கான பயணத்தை தொடர்ந்து வருகிறோம்.
எங்கள் சேவையை விரிவுபடுத்தி அதிகமானோருக்கு பயன் கிடைக்க விரும்புகிறோம். எங்கள் பணியில் உங்கள் விலை மதிப்பற்ற ஆதரவை வழங்கலாம்.

மதுரையின் அட்சய பாத்திரம் அறக்கட்டளைக்கு நன்கொடைகள் மூலமாகவோ, தன்னார்வலராகவோ, விழிப்புணர்வு ஏற்படுத்துபவராகவோ, சமூக சேவையில் ஆர்வமுள்ளவர்கள் தங்கள் பங்களிப்பை வழங்கலாம்.

நம்மைச் சுற்றியுள்ள இடங்களில் ஒருவரும் பசி இல்லாமல் ஒவ்வொரு நாளையும் கடக்க உதவுவோம்.

பசியாற்றும் சேவை பரமனுக்கு செய்யும் சேவை. இந்த சேவையில் இணைய விருப்பமுள்ளவர்களை அன்புடன் அழைக்கிறோம்.



**Rtn. நெல்லை பாலு**

நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை-16.

94426 30815 (G-Pay)

**Account Details:**

Maduraiyin Atchaya Paathiram Trust
Canara Bank - Madurai West Avani Moola Street
A/c No. 110031396472
IFSC Code : CNRB0001010, MICR Code : 625015006

/ maduraiyinatchayapaathiram / www.maduraiyinatchayapaathiramtrust.com

aanmeegamalar.com

# உலகம் போற்றும் சித்திரை திருவிழா





வருடத்தின் முதல் மாதமான சித்திரை துவக்கத்திலேயே தமிழகத்தில் விழாக்கோல மாதமாகவே துவங்கும், அதுவும் குறிப்பாக சித்திரை என்றால் அனைவரது நினைவுக்கு வருவது சகோதர சகோதரி பாசத்தை குறிக்கும் மதுரை சித்திரை திருவிழாதான்.

மதுரை, இந்த பெயரை உலகறிய செய்தது மீனாட்சி அம்மன் கோவில். உலக அதிசயங்களில் ஒன்றாக இடம் பெற போட்டி போட்ட இந்த ஆலயத்தால் மதுரைக்கு என்றென்றும் புகழ்தான்.

உள்நாட்டவர் மட்டுமின்றி, வெளி நாட்டவரும் தினமும் வந்து வியந்து பார்ப்பது இங்குள்ள மீனாட்சிசொக்கநாதர் ஆலயத்தை தான், கோவிலின் கட்டமைப்புகள் அதனை சுற்றியுள்ள அமைதியான சூழல் போன்றவை பலரையும் கவர்ந்திருக்கின்றன.

உலகப்புகழ் பெற்ற கோவிலை கொண்டாட மதுரையில் மக்கள் போற்றும் ஓர் உன்னத திருவிழா தான், சித்திரை திருவிழா. மீனாட்சி அம்மனின் பட்டாபிஷேகம், திக் விஜயம், சொக்கநாதருடன் திருக்கல்யாணம், தேரோட்டம் என களை கட்டி காணப்படுவது சித்திரை பெருவிழா.

இந்த விழாவைக்காண மதுரை மாவட்டம் மட்டுமின்றி, தென், வட மாவட்டங்களில் இருந்தும் ஏராளமானோர் குவிவது வழக்கம்.

மீனாட்சியின் திருவிழா மட்டுமல்ல கள்ளழகரின் மதுரை விஜயமும், வைகை ஆற்றில் இறங்கும் வைபவமும் சித்திரை திருவிழாவின் மற்றுமொரு விசேஷம். கோவிலில் இருந்து புறப்பட்டு, மதுரை வந்து மீண்டும் அழகர் தனது இருப் பிடம் திரும்பும் வரை விழாக்கோலம் தான். திருக்கண் மண்டக படிகளில் எழுந்தருளும் அழகரை காணவும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை பார்க்கவும் திரளும் கூட்டம், பொங்கி வரும் தண்ணீரை விட வேகமானதாகும்.

இதற்கு யாரும் அணை போட முடியாது. சித்ரா பவுர்ணமி நாளில், கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் காட்சியை காண கூடும் பல லட்சக் கணக்கான பக்தர்கள் கூட்டம் ஒவ்வொரு ஆண்டு அதிகரித்தே உள்ளது. மதுரையில் மட்டும் மின்றி வைகைஆறு பாயும் மானாமதுரை, பரமக்குடி ஆகிய நகரங்களில் பத்து நாட்கள் வைகைஆற்றிலே தினமும் நடைபெறும் திருவிழாவாக உள்ளது.

இங்கு சித்திரை பௌர்ணமி நாளில் நடைபெறும் நிலாசோறு திருவிழா இரவு முழுவதும் விடிய விடிய நடைபெறும். இதில் சர்வ அலங்காரத்தில் காட்சி தரும் கள்ளழகரை காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் குடும்பத்துடன் வந்து வழிபாடு செய்வார்கள்.

மீனாட்சியம்மன் கோவில் திருவிழாவையொட்டி தமிழகத் தில் பல கோவில்களில் சித்திரைமாதம் விழாக் கோலம் காணுவது சிறப்பு.

# அழகர் ஆற்றில் ஏன் இறங்குகிறார்

மதுரையிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில், அமைந்துள்ளது அழகர்மலை, இந்த மலையை தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு காளை வடிவத்தில் இருப்பதால் இந்த மலைக்கு 'விரிஷபாத்ரி' என்ற பெயர் உண்டு.

எமலோகத்தை ஆட்சி செய்யும் எமதர்மன் தனது அகந்தையால் சாபத்தைப் பெற்று அவதி படுகிறார், தனது சாபம் தீர இந்த மலைக்கு வந்து பெருமாளை தீவிரமாக வழிபட்டுபெருமாளிடம் சாப விமோசனம் பெறுகிறார், சாபத்தின் தீவிரத்தை அனுபவித்த எமதர்மன், பெருமாளிடம் ஒரு கோரிக்கை வைக்கிறார், ‘தனக்கு சாப விமோசனம் கொடுத்தது போல இங்கே கோவில் கொண்டு மானிடர்களுக்கும் அருள்புரிய வேண்டும்’ என்று பெருமாளிடம் வேண்டிக் கொள்கிறார். எம னின் கோரிக்கையை ஏற்று பெருமாள் இங்கு குடி கொண்டு மக்களுக்க அருள்புரிவதாக ஐதீகம்.

இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாள் எந் நேரமும் பக்தரை காக்கும் விதத்தில் தயார் நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது, இதற்கு சான்றாக பெருமாளின் கையில் உள்ள சக்கரம் எப்போதும் புறப்படத் தயாராக இருக்கும் வகையில் மிக நேர்த்தியாக காட்சியளிக்கிறது. இதுமட்டுமின்றி சுந்தரராஜப் பெருமாளின் கையில் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என பஞ்சாயுதங்களுடன் பக்தர்களை ஷன நேரத்தில் காத்திட தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.

## தேவலோக தங்க சிலைகள்

இத்தலத்தின் இன்னுமொரு சிறப்பு இத்தலத்தில் வீற்றிருக்கும் உற்சவர்தான், இந்த உற்சவர் தங்கத்தால் செய்யப்பட்டுள்ளார், அதுவும் பூமியில் கிடைக்கும் தங்கத்தில் அல்ல, தேவலோகத்தில் கிடைக்கும் 'அபரஞ்சி' என்ற அரியவகை தங்கத்தால் செய்யப்பட்டவர் உற்சவர்.

இந்த வகை தங்கத்தால் ஆன பெருமாள் சிலை உலகில் இரண்டு மட்டுமே உள்ளது. ஒன்று திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலிலும் மற்றொன்று அழகர் மலையிலும் மட்டுமே உள்ளதாக கூறப்படுகிறது.

## அழகர் ஏன் ஆற்றில் இறங்குகிறார்?

அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் இரண்டு விதமாக கூறப்படுகிறது.

### ஒன்று...

சுதபஸ் என்ற முனிவர், நூபுர கங்கையில் தீர்த்தமாடி, பெருமாளை நோக்கித் தவ மிருந்தார். அந்தச் சமயத்தில் துர்வாச மகரிஷி, தன் பரி வாரங்களோடு அவ்வழியாக வந்தார். பெருமாளையே நினைத்துக் கொண்டிருந்த முனிவர், ரிஷி வந்ததைக் கவனிக்காமலிருக்கவே ஆத்தி ரமடைந்த துர்வாசர் 'மண்டூகோ பவ' (தவளையாக போகக் கடவாய்!) என சாபமிட்டார். உடனே தவளையாகிப் போன சுதபஸ், சாபவிமோசனத்துக்கு வழிகேட்ட போது, 'விவேகவதி தீர்த்தக்கரையில்(வைகை) தவம் பண்ணிக்கொண்டிரு.

சித்ரா பௌர் ணமிக்கு மறுநாள் அழகர் அங்கு வந்து உனக்கு சாபவிமோசனம் கொடுப்பார்' என சொல்லியிருக்கிறார் துர்வாசர். அதன்படி வைகைக் கரையில் தவம் செய்து கொண்டிருந்த சுதபஸ் முனிவருக்கு, விமோசனம் கொடுக்க அழகர் மதுரைக்கு வந்து போனதாகப் புராணங்கள் விவரிக்கின்றன.



## மற்றொன்று....

பெருமாளின் சகோதரி அம்பாள், அந்தவகையில் அழகர் மீனாட்சியின் சகோதரர் என்பதால் மீனாட்சி கல்யாணத்தின் போது பெண்ணை தாரை வார்த்து கொடுக்க அழைக்கப்பட்டார், கல்யாணத்தில் கலந்து கொள்வதற்காக அழகர் மலையிலிருந்து மதுரைக்கு பயணம் செய்தார்.

அழகர் மலையில்இருந்து 20 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவை கடந்து வரும்போது வழிநெடுக மக்கள் திரண்டு நின்று அழகருக்கு வரவேற்பு கொடுக்கவே, பக்தர்களுக்காக நின்று நின்று வரும் அழகர், தல்லாகுளத்தில் வந்து தங்கினார்.

குறித்த நேரத்தில் தங்கை மீனாட்சி கல்யாண நிகழ்வில் கலந்து கொள்ள வர இயலவில்லை, முகூர்த்த நேரம் கடந்துவிடுமோ என்ற அச்சத்தில் அழகர் இல்லாமலே தங்கை மீனாட்சியின் திருமணம் நடந்து முடிந்துவிடுகிறது.

மறுநாள் வைகை ஆற்றை கடக்கும் போது திருமணம் முடிந்ததை கேள்விப்பட்ட அழகர் கோபம் கொண்டு மதுரை செல்லாமலேயே அழகர் மலை திரும்பினார் என்று இரண்டு விதத்தில் புராணங்களில் கூறப்படுகிறது.

## அழகர் வருகை விபரம்

சித்ரா பௌர்ணமிக்கு நான்கு நாள் முன்னதாகச் சித்திரைத் திருவிழா தொடங்கிவிடுகிறது. முதல் இரண்டு நாட்கள் கோயிலில் இருப்பார் அழகர். மூன்றாம் நாள் மாலை மதுரையை நோக்கிப் புறப்படுகிறார். கள்ளர் கொண்டை, கொண்டையில் குத்தீட்டி, கையில் வலை தடி (பூமராங்), இடுப்பில் ஜமதாடு (ஒருவகை கத்தி) என விதவிதமான ஆயுதங்களுடன் மதுரை நோக்கிப் புறப்படுகிறார் கள்ளழகர்.

## ஜமீன் காவல்!

கள்ளழகரின் பாதுகாவலராக வெள்ளியங் குன்றம் ஜமீன்தார் நியமிக்கப்பட்டிருந்தார். இன்றுவரை அந்த ஜமீன் வாரிசுகள்தான் கள்ளழகருக்குப் பாதுகாப்பு.

அக் காலத்தில் அழகருக்குப் பாதுகாவலாக சாரட் வண்டியில் அழகரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டே இருப்பார் ஜமீன். அழகர் மீண்டும் அழகர் மலை வரும் பத்து நாட்களும் அவர் அழகருடன் இருப்பார். இப்போதும் அதே வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

- பச்சைப்பட்டு கட்டி வந்தால் நாடு செழிப்பாக இருக்கும்.
- சிவப்புப் பட்டு கட்டிவந்தால் போதிய விளைச்சலு மிருக்காது. நாட்டில் அமைதியும் இருக்காது.
- வெள்ளை மற்றும் ஊதாப்பட்டு கட்டி வந்தால் நாடு இடைப்பட்ட நிலையில் இருக்கும்.
- மஞ்சள்பட்டு கட்டிவந்தால், அந்த வருடத்தில் மங்களகர நிகழ்வுகள் நடக்கும்.

இப்படி நம்பிக்கை இருப்பதால் 'ஆற்றில் இறங்க வரும் போது அழகர் என்ன கலர் பட்டு உடுத்தி வரப் போறாரோ?' என பக்தர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.





## உலகில் உள்ள சிவபக்தர்கள் ஒன்றுகூடும்

# மதுரை மீனாட்சி திருக்கல்யாணம்



மதுரையை ஆண்டுவந்த மலையத்துவஜன் என்ற பாண் டிய மன்னனும், இவரது மனைவி காஞ்சனமாலையும் குழந்தை பாக்கியத்துக்காக பார்வதி, பரமசிவனை வேண்டி யாகம் நடத்துகின்றனர். மனமிரங்கிய பார்வதி தானே 3 வயதுப் பெண் குழந்தையாக நெருப்பில் இருந்து வந்து காஞ்சனமாலையின் மடியில் வந்து விழுகிறாள். குழந்தை யைப் பார்த்து மகிழ்ந்து போன அரசனும், அரசியும் அந்தக் குழந்தை மூன்று ஸ்தனங்களுடன் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைகின்றனர்.

அப்போது வானில் தோன்றிய அசரீரி இவளை ஒரு ஆண்பிள்ளை போல வளர்த்து பட்டத்து ராணியாக முடிசூட்டுங்கள். மணப் பருவம் வந்த உடன் அவளது மூன்றாவது ஸ்தனம் மறைந்து விடும் என்கிறது.

மீனாட்சி ஆணுக்கு நகரான அனைத்து வகைபோர்க் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். மதுரையின் அரசியாக, மங்கையர்க்கரசி மீனாட்சிக்கு பட்டாபிஷேகம் நடக்கிறது.

மூன்று தனங்களுடன் பிறந்த மீனாட்சி, எந்த மன்ன னைப் பார்க்கும் போது ஒரு தனம் மறைகிறதோ, அவரையே திருமணம் செய்துகொள்வார் என்று மலையத்துவஜ மன்னன் கூறுகிறான். பட்டாபிஷேகதிற்குப் பிறகு மதுரையிலிருந்து படையுடன் கிளம்பி, ஒவ்வொரு திக்கிற்கும் சென்று போர்தொடுக்கிறார் மீனாட்சி.

பூமியில் உள்ள ஒவ்வொரு மன்னனையும் வெற்றி கொள்கிறார்.

### பல லட்சம் மக்கள் கலந்து கொள்வதன் ரகசியம்

எந்த வழியிலாவது இறைநிலை அடைந்தால் போதும் என்றுதான் அனைத்து மக்களும் பக்தி மார்க்கத்தில் அடியெடுத்து வைக்கின்றனர், இதற்காக பல்வேறு பூஜை, யாகம், யோகம் போன்றவற்றை எந்தவிதசுனக்கம் இன்றி செய்யமக்கள்தயங்குவதில்லை.இப்படி பட்ட சூழ்நிலையில், ஒரே இடத்தில் பிரபஞ்ச சக்திகள் அனைத்தையும் சூட்சுமமாக தரிசிக்கலாம் என்றால் கண்டிப்பாக மக்கள் அந்த இடத்தில் ஈ மொய்ப்பதைப் போன்று மொய்க்கவே செய்வார்கள். இதற்கு சான்றாகத்தான் மதுரை சித்திரைத் திருவிழா அமைந்துள்ளது.

உலகில் உள்ள அத்துனை தேவர்களும், மகரிஷிகளும், சித்தர்களும், பூதகணங் களும், அனைத்து தெய்வங்களும் மதுரையில் மீனாட்சி, சுந்தரேஸ்வரரின் திருமணம் நடந்த போது கலந்து கொண்டதாக புராணங்கள் கூறுகின்றன.

பூலோகத்தில் ஒன்று கூடும் இறைசக்திகளுடன் மக்களும், ஒன்று கூடி இவர்களின் ஆசிகளைப் பெறுவதற்காக பல லட்சம் பக்தர்கள் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண நிகழ்வில் கலந்து கொள்வ தாக கூறப்படுகிறது.

அவ்வாறு கிழக்குதிசையில் அவர் சென்ற போது, அமராவதி நாட்டின் மன்னனான இந்திரன் மீனாட்சியுடன் போர் செய்கிறான். ஆனால் மீனாட்சியின் வீரபராக்கிரமத்திற்கு ஈடு கொடுக்காமல் பணிகிறான்.

இப்படி ஒவ்வொருதிசையிலும் போர் தொடுத்து அனை வரையும் தன் காலில் விழச் செய்கிறார் மீனாட்சி.

இதேபோல, கயிலாயத்தின் மீது படையெடுத்து செல்கி றார் மீனாட்சி. அங்கு குடியிருக்கும் சிவபெருமான் மீனாட் சியை யார் என்று அறிந்தவர் ஆதலால், உற்சாகத்துடன் அன்னையை எதிர்கொள்ளச் செல்கிறார்.



படையுடன்வீரம் கொப்பளிக்க நின்று கொண்டிருக்கிறார் மீனாட்சி. எதிர்ப்புறத்தில் சிவபெருமான் வந்து கொண் டிருக்கிறார். சிவ பெருமான் நெருங்கி வர வர அன்னை யின் உள்ளத்தில் வெற்றி வேட்கை குறைந்து வெட்கம் குடிகொள்கிறது.

சிவபெருமான் அருகில் வர வர தனது கையில் இருந்த வாளைகீழே போட்டு விட்டு தலை குனிகிறார். அப்போது மீனாட்சியின் மூன்றாவது தனம் மறைகிறது. தனது மனாளனைக் கண்ட பூரிப்பில் ஆழ்ந்து நிற்கிறார் அன்னை.

அப்போது சிவபெருமான், "அங்கயற்கண்ணியே நீ என்று மதுரையம்பதியை விட்டு படையுடன் கிளம்பினாயோ அன்றே நானும் உன்னைப் பின் தொடர ஆரம்பித்து விட்டேன்.

இன்றுதான் உன்னை நேரில் காண்கிறேன். இனிமேல் நீயே என் துணைவி" என்று கூறவே அன்னையின் முகம் வெட் கத்தால் சூரியனைப் போல சிவந்தது.

உலகையே வென்று, மனாளனைக் கண்ட அன்னைக்கு நடைபெறும் திருமண நிகழ்வு மதுரையில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

உலகெங்கும் உள்ள சிவ பக்தர்கள் அம்பாளின் திரு மண வைபவத்தைக் காண சித்திரை மாதத்தில் மதுரையில் ஒன்று கூடுவதாக கூறப்படுகிறது.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம் ஓடு வியாபாரம் & சாமில்

SAK சீனியப்பா குரூப்ஸ் SAK




எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.


S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்
சீனியப்பா லாட்ஜ் A/C
SAK திருமண ஹால்


A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,
9842868256



# நான்கு யுகங்கள் கண்ட ஸ்ரீ கூடல் அழகர் பெருமாள் கோவில்

aanmeegamalar.com

ஐந்து கலசத்துடன் கூடிய ஐந்து நிலை ராஜகோபுரம், எட்டுப் பிரகாரங்கள், ஆண்டாள், சக்கரத்தாழ்வார், நவக்கிரகாதியர், ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள், மணவாள மாமுனிகள், விச்வக்சேனர், ராமர், கிருஷ்ணர், லட்சுமி நாராயணர், கருடன், ஆஞ்சநேயர், லட்சுமி நரசிம்மர் ஆகியோரின் சன்னதிகளுடன் மதுரையில் அமைந்துள்ளது கூடலழகர் பெருமாள் கோயில்.

108 வைணவத் திருத்தலங்களில் ஒன்று. இதற்கு ஆழ்வார் பாடல்கள் உள்ளன. இக் கோயிலின் கருவறையில் உள்ள பெருமாள் பெயர் 'கூடலழகர்'. மாடத்தில் பள்ளிகொண்டிருக்கும் கோலம் அந்தர வானத்து எம் பெருமான் என்னும் பெயருடையது.

அஷ்டாங்க விமானத்தின் கீழ்தளத்தில் கூடலழகர் அமர்ந்த கோலத்திலும், இரண்டாவது தளத்தில் சூரிய நாராயணர் நின்ற கோலத்திலும் மூன்றாவது தளத்தில் பாற்கடல் நாதர் பள்ளிகொண்ட கோலத்திலும் காணப் படுகிறார். உற்சவர் வியூக சுந்தர்ராஜப் பெருமாள்.

பிரம்மாவின் புத்திரரான சனத்குமாரருக்கு, பெருமாளை அர்ச்சாவதார (மனித ரூபம்) வடிவில் தரிசிக்க வேண்டுமென ஆசை எழுந்தது. தன் விருப்பம் நிறைவேற, இத்தலத்தில் பெருமாளை வேண்டி தவமிருந்தார்.

சுவாமி ஸ்ரீதேவி, பூதேவியுடன் அவருக்குக் காட்சி தந்தார். பின்பு சனத்குமாரர், தேவசிற்பி விஸ்வ கர்மாவை வரவழைத்து தான் கண்ட காட்சியை அப்படியே வடிவமைக்கச் செய்தார். அதை மிக அழகிய அஷ்டாங்க விமானத்தின் கீழ் பிரதிஷ்டைசெய்தார். அவரே கூடலழகர் எனப்பட்டார். இத்தலம் கிருதயுகத்திலேயே அமைக்கப்பட்டு விட்டது. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்களிலும் சிறப்புற்று விளங்குகிறது. எனவே இத்தல பெருமாள் யுகம் கண்ட பெருமாள்' எனப்படுகிறார்.

இங்குள்ள உற்சவர் "வியூக சுந்தர்ராஜன்' என்று அழைக்கப்படுகிறார். எந்த ஒரு செயலையும் செய்யும் முன்பு, சரியாக திட்டமிட்டு வியூகம் அமைத்து செயல் பட்டால் வெற்றி பெறலாம். இவ்வாறு எதிலும் வெற்றி தரும் அழகராக இவர் திகழ்வதால், இப்பெயரில் அழைக் கப்படுகிறார். இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் போர் புரியச் செல்லும் முன்பு, இவரை வேண்டி வெற்றிக்காக வியூகம் அமைத்துக் கொண்டனர். இதனாலும் இப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்வர்.

அஷ்டாங்க விமானத்தின் கீழ் தளத்தில் கூடலழகர் ஸ்ரீதேவி பூதேவியருடன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இரண்டாவது நிலையில், சூரிய நாரா யணர் தேவியருடன் நின்ற கோலத்தில் அருளுகிறார். இதில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெரும் தெய்வங்களும், அஷ்டதிக் பாலகர்களும், ஓவிய வடிவில் அருளுகின்றனர்.

இதனால் இந்த சன்னதியை, "ஓவிய மண்டபம்' என்று அழைக்கிறார்கள். மூன்றாவது நிலையில் பாற்கடல் நாதர், பள்ளி கொண்ட கோலத் தில் தாயார்களுடன் அரு ளுகிறார்.

இவ்வாறு, பெருமாள் இத்தலத்தில் நின்ற, அமர்ந்த, கிடந்த என மூன்று கோலங் களிலும் காட்சி தருகிறார்.

மேலும் பூவராகர்,





லட்சுமி நரசிம்மர், நாராயணன், லட்சுமி நாராயணன், ஆழ்வார்கள், வைணவ ஆச்சாரியர்கள் ஆகியோரையும் விமானத்தில் தரிசிக்கலாம். மலைக்கோயில்களில் பவுர்ணமியன்று கிரிவலம் போல், இங்கே பக்தர்கள் விமானத்தை வலம் வருகிறார்கள்.

ஒருமுறை மதுரையில் தொடர்ந்து மழை பெய்யவே, மக்கள் கடும் பாதிப்பிற்குள்ளாயினர். தங்களை மழையிலிருந்து காத்தருளும்படி பெருமாளை வேண்டினர். அவர்களது வேண்டுதலை ஏற்ற சுவாமி, நான்கு மேகங்களை ஏவினார். அவை, மதுரையைச் சுற்றி நான்கு மாடங்களாக ஒன்று கூடி, மழையிலிருந்து மக்களை காத்தது. இவ்வாறு, நான்கு மேகங்கள் ஒன்று கூடியதால் இத்தலம், "நான்மாடக்கூடல்' என்றும், கூடல் மாநகர்' என்றும் பெயர் பெற்றது. சுவாமியும், "கூடலழகர்' என்று பெயர் பெற்றார். இந்த பெருமாள் "துவரைக் கோமான்' என்ற பெயரில் மதுரை தமிழ்ச் சங்கத்தில் புலவராக அமர்ந்திருந்ததாக பரிபாடல் கூறுகிறது. எனவே இவரை, "புலவர் கூடலழகர்' என்றும் சிறப்பித்துக் கூறுகிறார்கள்.

பாண்டிய மன்னர்களின் சின்னம் மீன். இந்த சின்னம் உருவானதற்கு இத்தலத்து பெருமாளே காரணமாவார். முற்காலத்தில் இக்கோயிலைச் சுற்றி இருபுறத்திலும் மாலையிட்டதுபோல, வைகை நதி, கிருதுமால் நதி ஆகியவை ஓடின. இதில் கிருதுமால் நதிசுருங்கி ஓடையாகி விட்டது. பாண்டிய மன்னனான சத்தியவிரதன், இத்தல பெருமாள் மீது அதீத பக்தி செலுத்தினான். ஒரு முறை அவன் கிருதுமால் நதியில் நீராடிய போது, பெருமாள் மீன் வடிவில் தோன்றி உபதேசம் செய்தார். தனக்கு அருளிய சுவாமியின் நினைவாக மீன் சின்னத்தை வைத்துக்கொண்டான்.

பெருமாளின் 108 திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. உலகிலுள்ள அனைத்து பெருமாள் கோயில்களிலும் அதிகாலையில் பாடப்படும் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்ற "திருப்பல்லாண்டு' பாடல் இயற்றப்பட்ட தலம் மதுரை. இவ்வூரில் கூடலழகர் என்ற பெயரில் பெருமாள் அருளுகிறார். மார்கழி மாதத்தில் இத்தலத்தை தரிசிப்பது சிறப்பு.

பெருமாள் கோயில்களில் 96 வகையான விமானங்கள் அமைக்கப்படும். இதில் அஷ்டாங்க விமானம் மிகவும் புண்ணியம் தருவதாகக் கருதப்படுகிறது. 108 திவ்ய தேசங்களில் இங்கும், திருக்கோஷ்டியூரிலும் மட்டுமே சுவாமி, அஷ்டாங்க விமானத்தின் கீழ் காட்சி தருகிறார். இந்த விமானம் 125 அடி உயரம் கொண்டது. இதிலுள்ள கலசம் 10 அடி உயரமுடையது. இதன் நிழல் தரையில் விழுவதில்லை. மூன்று நிலைகளுடன், எட்டு பகுதிகளாக உயர்ந்து நிற்கும் இந்த விமானம் "ஓம் நமோ நாராயணாய' என்ற எட்டெழுத்து மந்திரத்தின் வடிவமாகும்.

திருமணத்தடை, குழந்தை பாக்கியம், கல்வியறிவிற்காக பிரார்த்தனை செய்கிறார்கள், இங்கு தாயாருக்கு பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள்.

மூன்று தளங்களும் 5 சிகரங்களும் கொண்ட அஷ்டாங்க விமானம். இதன் நிழல் தரையில் விழுவதில்லை. பாண்டியனின் ஐயம் தீர்த்து மதுரையில் பொற்கிழி அறுத்த பெரியாழ்வார் இக்கோயிலில் இருந்த அந்தர வானத்து எம்பெருமானின் கோலம் கண்டே திருப்பல்லாண்டு பாடினார்.

பொதுவாக சைவ சமய கோயில்களில் மட்டுமே நவக்கிரக சன்னதி இருக்கும். வைணவ ஸ்தலமான இக்கோயிலில் நவகிரகங்களின் சன்னதி உள்ளது. ஒன்பது கிரகங்களையும் வணங்கும் விதமாக தசாவதார சுலோகம் உள்ளது.

கூடலழகர் கோவில் வேண்டுதல் ஸ்தலமாக திகழ்கிறது. கோவிலை 1 மண்டலம் அதாவது 48 நாட்கள் சுற்றி வந்து வேண்டிக் கொண்டால் நினைத்த காரியம் கைகூடும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.



# பாதாள லிங்க குரு பீட பணிக்கு உதவுங்கள்



## ஜோதிட சக்ரவர்த்தி ஏ.எம்.ஆர்.ஐயா வேண்டுகோள்



மகத்தான புண்ணிய பலன்களைத் தரக்கூடிய தர்ம காரியங்களில் ஒன்று கோசேவை. இதனை உணர்ந்து தற்போது நாடு முழுவதும் பல இடங்களில் கோசாலைகள் நிர்மாணிக்கப்பட்டு நல்லவிதமாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்று அறச்சலூர் ஸ்ரீ கிருஷ்ண துளசி கோசாலை.

இப்படி ஒரு புண்ணிய புனித கோசாலை இங்கு அமையப் போவதை சூட்சுமமாக அறிந்துதான் இந்த கோசாலை உள்ள ஊருக்கு அறச்சலூர் என பெரியோர்கள் பெயரிட்டார்கள் போலும் எனது எழுத்துக்களில் அதீத ஈடுபாடு கொண்ட பூபதி தம் முற்பிறவியில் செய்த நற்செயல்களின் பலனாக, தமது உத்தம நண்பர்களுடன் சேர்ந்து அரும்பாடுபட்டு ஊன்றிய தெய்வீக விதை, அறச்சலூர் வீரப்பம்பாளையத்தில் ஸ்ரீ கிருஷ்ணதுளசி கோசாலை எனும் கற்பக விருட்சமாக ஆன்றோர்கள் பாராட்டும் விதமாக தெய்வீக மனம் வீசித் திகழ்கிறது.

மரணத்தின் வாயிலில் கண்களில் மரண பயம் பளிச்சிட அனாதையாக நின்ற பல பசுக்களையும் அவற்றின் குழந்தைகளான கன்றுகளையும் இந்த கோசாலை காப் பாற்றிய புண்ணியத்தை விவரிக்க வார்த்தைகள் இல்லை. படிப்படியாக வளர்ந்து இன்று பசுக்களும், கன்றுகளும், காளைகளாகவும் சுமார் 70 ஜீவராசிகள் இங்கு உள்ளன.

கோசாலையைப் பராமரிப்பது என்பது தற்காலத்தில் அவ்வளவு எளிதல்ல. பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வெட்டுக்குப் போன வயதான பால் வற்றிய பசுக்களை மீட்டு அவை ஜீவித்திருக்கும் கடைசி நிமிடம் வரை பராமரித்து வருவதையும் உயிர் விட்ட பின் ஒரு மகானுக்குச் செய்யும் சகல இறுதி மரியாதையையும் செய்து கோசாலை எல்லைக்குள் முறைப்படி அடக்கம் செய்யப்பட்டிருப்பதையும் அறியும் போது பாராட்டுவதற்கு வார்த்தைகளே இல்லை.

கோசாலை அமைந்ததுடன் பூபதியின் ஆன்மிகதாகம் அடங்கவில்லை. பகவானது கருணையால் அவரது இடை யறாத பெரும் முயற்சியினால் கோசாலை வளாகத்திலேயே ஸ்ரீ ராஜகோபால சுவாமிக்கும், நர்மதை நதியில் இருந்து எழுந்தருளச் செய்யப்பெற்ற சிவலிங்கத்திற்கும் அழ கான திருக்கோயில் எழுப்பப் பெற்று கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

உலகப் பிரசித்தி பெற்ற உடுப்பி பெஜாவர் மடாதி பதியும், அயோத்தி ராமர் திருக்கோயில் நிர்மாண கமிட்டி உறுப்பினருமான ஸ்ரீ ஸ்ரீ விஸ்வபிரசன்ன தீர்த்தர் அவர்களும், மன்னார்குடி ஸ்ரீ ஸ்ரீ செண்டலங்கார ஜீயர் அவர்களும் மேலும் ஏராளமான ஆச்சார்ய மகாபுருஷர் களும், பெரியோர்களும், பாகவதர்களும் பாதஸ்பரிசம் பெற்ற கோசாலை இது.

இத்துடன் வருடந்தோறும் சுற்றுப்புற கிராம மக்களின் மத்தியில் ஸ்ரீ ஸ்ரீனிவாச திருக்கல்யாண வைபவம் நிகழ்த்தி வருவது, கோடிக்கணக்கான ராம நாமங்கள் கொண்டு ஸ்ரீ ராமநாம ஸ்தூபி அமைத்ததுடன், ஸ்ரீ ராமகோடி மண்டபம் அமைக்க முயற்சித்து வருவதும் பாராட்டுதலுக்கு உரியதாகும்.


இந்நிலையில் இயல்பாக கிடைக்கப் பெற்ற தெய் வீகக் குறிப்புகளின் அடிப்படையில் பொள்ளாச்சி திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் துணையுடன் மிகவும் சக்தி வாய்ந்ததும், மிகுந்த தெய்வீக அதிர்வுகளைக் கொண்டதுமான லிங்க மூர்த்தமான பாண லிங்கத்தை மத்தியப் பிரதேசத்தில் இருக்கும் நர்மதை நதியிலிருந்து முறைப்படி சோசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளது.


மேற்படி பாதாள பாணலிங்கேஸ்வரர் அமைப்பதற்கான நிலமும் அமைந் துள்ளது. நல்ல உயிரோட்டம் உள்ள கருங்கற்களால் அமைய உள்ள இந்த சந்நிதிக்கு அன்பர் கள் தங்கள் வசதிக்குட்பட்டு ஆதரவளித்து ஈடு இணை இல்லாத மகத்தான புண்ணிய பலன்களைப் பெற்று மகிழுமாறு பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

அற்புதமாக உருவாகவிருக்கும் இந்த ஆலய திருப் பணிக்கு உதவுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: விஜயபூபதி, ஸ்ரீ கிருஷ்ணதுளசி கோ சேவா சமிதி, ஈரோடு, 8778672056

aanmeegamalar.com

உ






ஈரோடு மாவட்டம், அறச்சலூர், வீரப்பம்பாளையம்

## ஸ்ரீ கிருஷ்ணதுளசி கோசாலை

ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ பிரசன்ன வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில்,
ஸ்ரீ புவனேஸ்வரி மாதா சமேத உடனமர் ஸ்ரீ புவனேஸ்வர பெருமான் திருக்கோயில்

# ஸ்ரீ பசுபதிநாதர் திருக்கோயில்
# (பாதாள லிங்கம்)
# கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

### கும்பாபிஷேக நிகழ்வுகள்

| நாள் | நேரம் | நிகழ்ச்சிநிரல் |
|---|---|---|
| வைகாசி 25ம் நாள் 06.06.2024 வியாழன் | காலை 11.00 மணி | காவேரி தீர்த்தத்திற்குச் செல்லுதல் |
| வைகாசி 26ம் நாள் 08.06.2024 சனிக்கிழமை | காலை 05.50 மணி | மங்கள இசை, கோபூஜை, விநாயகர் வழிபாடு, மஹா கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | மாலை 6.01 மணி | விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாஜனம், பஞ்சகவ்யம், வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்ப அலங்காரம், கலாகர்ஷணம், கும்ப ஸ்தாபனம், யாகசாலை பிரவேசம், முதற்கால யாக பூஜை ஆரம்பம். பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| வைகாசி 27ம் நாள் 09.06.2024 ஞாயிறு | அதிகாலை 5.00 மணிக்கு மேல் | மங்கள இசை, இரண்டாம் கால யாக பூஜை, நாடிசந்தானம், ஸ்பார்சாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | காலை 7.10 மணி | யாகசாலையிலிருந்து கலச குடங்கள் புறப்பாடு. |
| | காலை 7.40 மணிக்கு | **மஹா கும்பாபிஷேகம்** |
| | காலை 8.15 மணி | அபிஷேகம், அலங்காரம், கோபூஜை, தீபாராதனை, உபசார பூஜைகள், பிரசாதம் வழங்குதல். |
| | காலை 08.20 மணி முதல் | **அன்னதானம்** நடைபெறும். |
| வைகாசி 28, 10.06.2024 திங்கள் முதல் | மாலை 6.00 மணி | **மண்டல பூஜை ஆரம்பம்.** |




உடுப்பி பெஜாவர் மட பீடாதிபதி
ஸ்ரீஸ்ரீ விஸ்வபிரசன்னதீர்த்தர்
சுவாமிகள்
சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி
ஜகத்குரு சங்கராச்சாரியார்கள்
ஸ்ரீஸ்ரீபாரதீ தீர்த்த
மஹாஸன்னிதானம் மற்றும்
ஸ்ரீஸ்ரீவிதுசேகர
பாரதீ ஸன்னிதானம் அவர்கள்
பூரண ஆசிர்வாதங்களுடன்
நடைபெறவுள்ளது.


தொடர்பு முகவரி



**ஸ்ரீ கிருஷ்ணதுளசி கோ சேவா சமிதி, ஈரோடு**

நெ.6, வீரப்பம்பாளையம் (அஞ்சல்), அறச்சலூர் (வழி),
ஈரோடு மாவட்டம் – 638 101.

செல் : 95240 24983, 87786 72056. Email : bhupathikalai@gmail.com



Bank Details :
SHRI KRISHNATHULASI GHO SEVAA SAMITHI, ERODE
THE KARUR VYSYA BANK LTD, Chennimalai Branch, IFSC Code : KVBL0001641. Current A/c No. 1641135000004169
G.Pay : 87786 72056 (Vijaya Boopathi)


aanmeegamalar.com

# மதுரையிலிருந்து ஆசி வழங்கும் மகா பெரியவா கோவில்

## தினந்தோறும் அன்னதானம் வழங்கும் மதுரையின் அட்சய பாத்திரம்

aanmeegamalar.com

காஞ்சியின் கருணைக்கடல் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா' நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அவரை ஆத்மார்த்த குருவாக ஏற்றுக் கொண்ட பக்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல நிகழ்ச்சிகளே அதற்குச் சான்று. காஞ்சியில் அருளும் ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா, மீனாட்சி அருளாட்சி செய்யும் மீனாட்சி பட்டணமான மதுரையில் குடி கொண்ட வரலாறும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.



மகா பெரியவாவின் தொண்டர்களில் ஒருவர் நெல்லை பாலு. காஞ்சிபுரத்தில் பத்திரிக்கையாளராக பணியாற்றி காஞ்சி மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை செய்து வந்தவர். மகா பெரியவரின் காலத்திற்கு பிறகு, குடும்ப சூழல் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தார். மகா பெரியவாவின் தீவிர பக்தரான இவருக்கு அடிக்கடி காஞ்சிபுரம் சென்று தரிசிக்க இயலவில்லையே என்ற மனக்குறை மட்டும் தீரவில்லை. எனவே, மதுரையில் அனுஷத்தின் அனுகிரகம் என்ற அமைப்பை தொடங்கி மகா பெரியவரின் பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், மதுரையிலேயே பொது இடத்தில் அவரது படங்களை வைத்து பூஜிப்பதை வழக்கமாக செய்து வந்தார். பெரியவா குறித்த சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்து வந்தார். இவ்வாறு, பூஜைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன. இதில் கலந்து கொண்ட பல பக்தர்களும் மதுரையில் பெரி யவருக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வந்தனர். அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்கள் தான் காஞ்சி பெரியவரின் அனுக்கிரகம்.



அது பற்றிப் பேசிய நெல்லை பாலு, "2012 ஆம் ஆண்டில், மகா பெரியவரின் வருடாந்திர ஜெயந்தி விழாவிற்கு சுமார் 2 வாரங்களுக்கு முன்பாக, கனவில் மகாபெரியவரின் விக்ரகம் ஒன்று தொடர்ச்சியாக வந்தது. அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காஞ்சி மடத்திற்கு சென்று விட்டேன். ஜெயேந்திரரிடம் கனவைப் பற்றியும் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியபடி ஒரு சிலையை பக்தர்கள் இதற்கு முன்பாக மடத்திற்கு கொடுத்துள்ளதாகவும் அப்போது அவர் தெரி வித்தார். பின்னர், மகாபெரியவரின் அதிஷ்டானத்தில் வழிபட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அப்போது, மடத்திற்கு வந்திருந்த சுமார் ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் என்னருகே வந்து, 'சிலை விஷயமாத்தானே புது பெரியவாவிடம் பேசுனீங்க!' எனக் கேட்க, ஒரு கணம் அதிர்ந்தே போய் விட்டடேன். நான் உள்ளே பேசியது வெளியில் இருந்த சிறுவனுக்கு எப்படித் தெரியும்? என வியப்பு எனக்கு! அதற்குமேல் பேசாத அந்தச் சிறுவன், ஒரு தொலைபேசி எண்ணை மட்டும் கொடுத்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து நடையைக் கட்டி விட்டான். அங்கு அந்தச் சிறுவனை தவிர வேறு யாரும் இல்லை. ஒருவேளை பெற்றோர்களுடன் வந்திருந்தாலும் கூட, அப்படி யாரும் அங்கு இருந்ததாகவும் தெரியவில்லை.

குழப்பத்தோடு, சிறுவன் கொடுத்த எண்ணை தொடர்பு கொள்ள, எதிர்முனையில் பேசியவர் கும்பகோணத்தில் இருந்த ஒரு சிற்பி. 'இது பெரியவாவின் அனுக்கிரகம்!' என்று அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். கனவில் கண்டபடி சிலை வடிக்க வேண்டும் என்று ஸ்தபதியிடம்







கேட்க, அவ்வாறு சிலை வடிக்க தாமதம் ஆகும் என்று சொன்ன சிற்பி, ஏற்கனவே காஞ்சிப் பெரியவரின் ஒரு சிலை தயாராக இருப்பதாகச் சொல்லி, சிலையையும் மதுரைக்கு அனுப்பி விட்டார்" என்றார் வியப்பு குறையாமல்.

அதன்பின்னர், பக்தர்களின் பங்களிப்புடன் சிலையை பிரதிஷ்டை செய்து, 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்' என்னும் பெயரில் வழிபாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரையில் குடி கொண்டு, பக்தர்களுக்குத் தன் அருளாசியை வழங்கி வருகிறார் மகா பெரியவா. காஞ்சிப்பெரியவர் தனது கடைசி கால கட்டத்தில் இருந்த தோற்றத்தில் உள்ளது இங்குள்ள சிலை. உடல் மெலிந்து, நெஞ்சின் விலா எலும்புகள் புடைப்பாக தெரியும்படி தத்ரூபமாக இருக்கிறது. காஞ் சிபுரம் மடத்தில் ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், தங்கச் சப்பரத்தில் அவரது சிலை உலா வரும். கிட்டத்தட்ட அந்தச் சிலையை ஒத்த அளவிலேயே இங்குள்ள சிலையும் அமைந்திருப்பது சிறப்பு.

மதுரையில் மகாபெரியாவா ஆசியுடன் தினந்தோறும் உணவு வழங்கும் அட்சய பாத்திரம் மதுரை அனுஷத்தின் அனுகிரகம் ஸ்தாபகர் நெல்லை பாலு மதுரையில் கொரோனா காலத்தில் இருந்து ரோட்டோரம் உள்ள ஆதரவற்றோர் முதியோர் மற்றும் அரசுமருத்துவ மனையில் உள்ள நோயாளிகள் ஆகியோர்க்கு தினந்தோறும் மதிய உணவை நேரில் சென்று வழங்கிவருகிறார்.


மகா பெரியவா ஆசியுடன் மதுரையின் அட்சய பாத்திரம் என்ற டிரஸ்டை தொடங்கி தற்போது வரை 900 நாட்களாக உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த சேவையை முன்னாள் அமைச்சர்கள் மாவட்ட ஆட்சியர், ஆன்மிக பெரியோர்கள் பாராட்டி வருகின்றனர்.

மதுரை மகா பெரியவா ஆலய தொடர்புக்கு 9442630815

எங்கே இருக்கிறது? மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள, எஸ்.எஸ்.காலனி எண் 13 பொன்மேனி நாராயணன் ரோட்டில் அமைந்துள்ளது. அரசரடி அல்லது காளவாசல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

திறப்பு நேரம் காலை 8 10 மணி, மாலை 5 இரவு 8 மணி, தொடர்புக்கு: 94426 30815

தரிசிக்க வாருங்கள்!
காஞ்சி
ஸ்ரீ மஹா பெரியவா
கோவில் (க்ருஹம்)
13, பொன்மேனி நாராயணன் ரோடு,
எஸ்.எஸ்.காலனி, மதுரை.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவார தினத்தன்று சிறப்பு புஷ்பாஞ்சலி நடைபெறும். வியாழன் அன்று நடைபெறும் குருவார நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் ஸ்படிக மாலை பிரசாதமாக வழங்கப்படும். அனுஷ நட்சத்திர தினத்தன்று ஸ்ரீ மஹா பெரியவா விக்ரஹம் மற்றும் வெள்ளி பாதுகைக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.

அனுஷ வைபவத்திற்கு தங்களின் அருட்கொடையினை வழங்கிட அன்பு வேண்டுகோள்



ஸ்ரீ மஹா பெரியவா அருட்பணியில்...
Rtn.நெல்லை பாலு,
நிறுவனர், அனுஷத்தின் அனுகிரஹம்
செல் : 9442630815(G-Pay)



# கிரக தோஷங்களை நீக்கும் நவதிருப்பதி

இந்த வைணவத் திருப்பதிகளை "நவதிருப்பதிகள்" என்பர். ஒவ்வொரு திருப்பதியை வழிபட ஒரு கிரகதோஷம் நீங்கும் என்று சொல்வார்கள், தாமிரபரணிக்கு ஒரு விசேஷம் உண்டு. தன் இரு கரைகளிலும் ஏராளமான சிவ, விஷ்ணு தலங்களைக்கொண்டிருக்கும் திருநதி இது. கங்கையைப் போல், காவிரியைப்போல் சமயப் பெருமை படைத்த நதியே தாமிரபரணியாகும். இதனை தட்சிண கங்கை என்று சொல்வதும் உண்டு.

தாமிரபரணி கரையோரத்தில் ஒன்பது சிவன்கோயில்கள் உண்டு. அதை "நவ கயிலாயம்" என்பார்கள். நவகயிலாயத்துக்கு இணையாக ஒன்பது திருப்பதிகள் உண்டு. இந்த வைணவத் திருப்பதிகளை "நவதிருப்பதிகள்" என்பர். ஒவ்வொரு திருப்பதியை வழிபட ஒரு கிரகதோஷம் நீங்கும் என்று சொல்வார்கள்.

நவதிருப்பதிகளில் முதலாவது ஸ்ரீவைகுண்டம் இங்குள்ள மூலவர் ஸ்ரீவைகுண்டநாதன், உற்சவர் கள்ளப்பெருமாள், தாயார் முறையே வைகுந்த வல்லி, பூதேவி என்று சொல்லப்படுவார். ஆதிசேஷன் குடைபிடிக்க நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். இது சூரியதோஷ நிவர்த்தி தலம்.

இரண்டாவது வரகுணமங்கை வீற்றிருந்த கோலத்தில் விஜயாசனப் பெருமாள் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். வரகுணவல்லி என்பது தாயாரின் பெயர். வரகுணமங்கை தாயார் உபயநாச்சியார். இந்தத் தலம் பரிகார தலமாகும்.

மூன்றாவது திருப்புளியங்குடி புஜங்க சயனத்தில் மூலவர் காய்சேன வேந்தன் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். மலாமகள் நாச்சியார், பூமகள் நாச்சியார் இவர் தேவியர். இது புதனுக்குரிய பரிகார தலமாகும்.

நான்கு, ஐந்தாவது தலங்கள் திருத்தொலைவில்லி மங்கலம் இதனை "இரட்டைத் திருப்பதி" என்பார்கள். இரண்டு பெருமாள் கோயில்கள் உண்டு. சீனுவாசன் (தேவபிரான்). அரவிந்தரோசனன் (செந்தாமரைக் கண்ணன்) ஆகிய இருவரும் முறையே நின்ற வீற்றிருந்த கோலங்களில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கின்றனர். இது ராகுகேது பரிகாரத் தலமாகும்.

ஆறாவது திருக்குளத்தை எனப்படும் பெருங்குளமாகும் இங்குள்ள சீனிவாசன் மற்றும் அரவிந்தரோசனன் நின்ற கோலத்திழல் சேவை சாதிக்கிறார்கள். அலமேலு மங்கையார், குழந்தை வல்லி என்பன தாயார் திருநாமங்கள். இது சனி பரிகார தலம்.

ஏழாவது திருக்கோளூர் இங்கு வைத்தமாநிதி பெருமாள் கோயிலில் வைத்திநிதி பெருமாள், நிஷேபவித்தன் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். தாயார் குமுதவல்லி, கோளூர்வல்லி எனப்படுவர். இது செவ்வாய்க்குரியபரிகார தலமாகும்.

எட்டாவது தென்திருப்பேரை எனப்படும் இத்தலம் திருப்பொறை எனப்படுகிறது மகரநெடுங்குடைகாதன் மற்றும் நிகரில் முகில்வண்ணன் வீற்றிருந்த கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். தாயார் முறையே குழக்காதவல்லி, திருப் பேறை நாச்சியார் எனப்படுவர். இது சுக் கிரன் பரிகார தலமாகும்.

ஒன்பதாவது திருத்தலம் திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார்திருநகரியாகும் இது நம்மாழ்வார் அவதாரத் தலம். ஆதிநாதன், ஆதிப்பிரான், பொலிந்துநின்றபிரான் என்றெல்லாம் போற்றப்படும் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். ஆதிநாதவல்லி, குருகூர்வல்லி என்பன தேவியின் திருநாமங்கள். இது குரு பரிகாரத் தலமாகும்.

இந்த ஒன்பது ஆலயங்களிலிருந்து பெருமாள் கருட வாகனத்தில் எழுந்தருளி சேவை சாதிப்பது "நவகருட சேவை" என்பது விசேஷமாகச் சொல்லப்படும். திருநாங்கூர் கருட சேவையைப் போல மிக விசேஷமானதுநவகருட சேவையாகும். நவகருட சேவையை தரிசிக்க கிரகதோஷங்கள் அனைத்தும் விலகுதல் உறுதி என்பது அடியவர்கள் அனுபவித்தில் உணர்ந்த நம்பிக்கைகளில் ஒன்றாகும்.

aanmeegamalar.com

ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

வாசுதேவா என்றால்
வளம் பொங்கும்!
வாசுதேவன் பாத்திரத்தில்
ராசி பொங்கும்!!





# வாசுதேவன் பாத்திரக்கடை

முகவையின் மபெரும்
பாத்திரக்கடை



கல்யாண சீர்வரிசைக்கு தேவையான
பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர்,
கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும்
வாங்க கைராசியான நிறுவனம்



12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம்

போன்: 04567220 209, செல்: 88074 08807

aanmeegamalar.com

# பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றி வேண்டிய வரங்களை தரும் மானம்பாக்கி தர்மமுனீஸ்வரர்









சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் மானம் பாக்கி தெற்கு எல்லையில் அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ தர்ம முனீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. அழகிய கலைநயம்மிக்க வேலைபாடுகளுடன் அமைக்க பட்ட தர்மமுனீஸ்வரர் கோவிலில் திருபணிகள் முடிந்து கடந்த ஆண்டு ஜீன் 1ந்தேதி மஹா கும்பாபிஷே கம் நடைபெற்றது. அதைதொடர்ந்து இந்த ஆண்டு களரி விழா நடைபெறுகிறது.

பாரத புண்ணிய பூமிலே நில வளமும், நீர்வளமும், தர்ம அறநெறியும், கொடை உள்ளமும், ஆன்மீகமும் ஓங்கிநிற்கும் புண்ணிய பூமியாம் மானம்பாக்கி தெற்கு எல்லையில் அருள்பாலித்து வரும் அகிலாண்ட கோடி பிரம்மாண்டநாயகர் அருள்மிகு ஸ்ரீ தர்மமுனீஸ்வரர், ஸ்ரீ மஹாகணபதி, ஸ்ரீ புத்தடி வேங்கை, ஸ்ரீ பெரிய கருப்பணசாமி, ஸ்ரீ சமயணசாமி, ஸ்ரீ பொன்ராக்கச்சி, ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ சிவசூரியன், ஸ்ரீ பொன்னுச்சாமி, ஸ்ரீ செங்கமலம் போன்ற தெய்வங்கள் தனிசன்னதியில் அருள்பாலிக்கும் இக்கோவிலில் வரும் மே 31 ந்தேதி வைகாசி18 ம் நாள் காலை வருஷாபிஷேக விழாவும்

அன்று இரவு களரிவிழா விற்க்கு காப்புகட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. வரும் ஜீன்7ந்தேதி வைகாசி 25ம்நாள் களரிவிழா சிறப்பு யாகம், அன்னதானம், பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்துதல் நிகழ்ச்சிகள் நடை பெறுகிறது. கடந்த 20 வருடங்களாக இக்கோவிலில் திருப்பணிவேலைகளை

இறை ஆசியோடு ஆஹம ஸ்தபதிகள் உடவயல் செந்தில்சிற்பி மற்றும் உடவயல் கண்ணதாசன் சிற்பி ஆர்வமுடன் செய்துவருகின்றனர்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க அனைவரும் வருக! இறையருள் பெறுக!

உங்களுக்கு ஸ்ரீ தர்மமுனிஸ்வரன் துணை இருந்தால் இந்த உலகமே எதிர்த்தாலும் அதில் நீங்கள் வெற்றி பெற லாம். என வருஷாபிஷேக விழா களரிவிழா ஏற்பாடுகளை

ஸ்ரீதர்மமுனிஸ்வரர் சுவாமி கும்பிடும் பங்காளிகள், ஸ்ரீதர்மமுனிஸ்வரர் பொன்னடி மக்கள் மற்றும் பக்த கோடி பொதுமக்கள் செய்து வருகின்றனர். ஆலய தொடர்புக்கு 9443191106









சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம்
மானம்பாக்கி தெற்கு எல்லையில் அருள்பாலித்துவரும்

# அருள்மிகு
# ஸ்ரீதர்ம முனீஸ்வரர் திருக்கோவில்
## வருஷாபிஷேகம் களரி விழா





**31.05.2024**
வைகாசி 18 வெள்ளிகிழமை காலை
வருஷாபிஷேகவிழா
இரவு களரி விழா காப்பு கட்டுதல்

**07.06.2024**
வைகாசி 25 வெள்ளிகிழமை களரி
விழா, பூஜை, அன்னதானம் நடைபெறும்

பக்த கோடிகள் அனைவரும் வருக வருக
மானம்பாக்கி தெற்கு எல்லை ஸ்ரீதர்ம முனீஸ்வரர் அருள்ஆசி பெறுக

இப்படிக்கு
ஸ்ரீதர்மமுனீஸ்வரர் சுவாமி கும்பிடும் பங்காளிகள்,
ஸ்ரீதர்மமுனீஸ்வரர் பொன்னடிமக்கள் மற்றும் பக்தகோடிகள்

**தொடர்புகொள்ளவும் 9443191106**

aanmeegamalar.com

# அழகரைப்போன்று ஆற்றில் இறங்கும் தாடிக்கொம்பு சவுந்தரராஜபெருமாள்

"மண்டூகம்' என்ற சொல்லின்பொருள் "தவளை'. ஒரு சாபத்தின் காரணமாக மகரிஷி ஒருவர் தவளையாக மாறி விட்டார். இதனால், அவர் "மண்டூக மகரிஷி' என பெயர் பெற்றார். தன் சாப நிவர்த்திக்காக இத்தலத்தில் மகாவிஷ்ணுவை வேண்டி தவமிருந்தார். அப்போது, அசுரன் ஒருவன் அவரை தொந்தரவு செய்யவே, அவனிடமிருந்து தன்னைக் காக்கும்படி மதுரையில் அருளும் கள்ளழகரை வேண்டினார். அவருக்கு அருளிய சுவாமி, அசுரனை அழித்தார்.மேலும், அவரது வேண்டுதலுக்காக இங்கேயே எழுந்தருளினார். "சவுந்தரராஜர்' என்றும் திருநாமம் பெற்றார். மதுரை அழகர் கோயிலுக்கு இணையான சிறப்பை பெற்ற இத் திருத்தலத்தை 500 வருடங்களுக்கு முன்பு விஜய நகர ஆட்சி வழி வந்த அட்சுத தேவராயர் கட்டியதாக வரலாறு கூறுகிறது.



மதுரை அழகர்கோயிலுக் குண்டான நேர்த்திக்கடனை இங்கே செலுத்தலாம்.

இக்கோயிலில் கல்வி தெய்வங்களான ஹயக்ரீவர், சரஸ்வதி இருவரும் அடுத்தடுத்து காட்சியளிக்கின்றனர்.

திருவோணத்தன்று ஹயக்ரீவருக்குதேனபிஷேகத்துடன் விசேஷ பூஜை நடக்கிறது.படிப்பில் மந்தம், ஞாபகமறதி, பேச்சுகுறைபாடு உள்ளவர்கள் இந்நாளில் ஹயக்ரீவருக்கு தேங்காய், நாட்டுச்சர்க்கரை, நெய் சேர்ந்த கலவையை படைத்து, ஏலக்காய் மாலை அணிவித்து வேண்டிக் கொள்கிறார்கள்.

தன்வந்திரிக்கும் தனி சன்னதி உள்ளது. அமாவாசை தோறும் மூலிகை தைலாபிஷேகம், மூலிகை லேகியம் படைத்து தன்வந்திரிக்கு பூஜை நடக்கிறது. இங்குள்ள சக்கரத்தாழ்வாரும் விசேஷ மானவர். இவரைச் சுற்றிலும் காயத்ரி மந்திர தேவதைகள் உள்ளனர். இவருக்குப் பின்புறம் உள்ள நரசிம்மரை சுற்றிலும் அஷ்ட லட்சுமிகள் உள்ளனர்.

இத்தகைய அமைப்பைக் காண்பது அபூர்வம். விஷ்வக்ஸேனர், இரட்டை விநாயகர், பெருமாளின் தசாவதாரம், லட்சுமி நரசிம்மர், வேணுகோபாலர், ஆஞ்சநேயர், சொர்ண பைரவர் ஆகியோருக்கும் சன்னதி உண்டு.

இதை "சிற்பக்கோயில்' என்று சொல்லு மளவுக்கு பிரமாண்டமான கலைவண்ணங் களைக் காணலாம். தாயார் கல்யாண சவுந்திரவல்லி தனி சன்னதியில் இருக்கிறார்.

இவளது சன்னதி முகப்பில், நின்ற நிலையில் விநாயகர், விஷ்ணு துர்க்கை மற்றும் சங்கநிதி, பதுமநிதி உள்ளனர்.இச்சன்னதி முன் மண்டபம் சிற்ப சிறப்பை வெளிப்படுத்தும் கலைக் கூடமாக வடிக்கப் பட்டுள்ளது. இங்குள்ள தூண்களில் உலகளந்த பெருமாள், நரசிம்மர், வைகுண்டநாதர், வேணு கோபாலர், கருடன் மீது அமர்ந்த பெருமாள், ராமரை தோளில் சுமந்த ஆஞ்சநேயர், சக்கரத் தாழ்வார், ஊர்த்து வதாண்டவர், ஊர்த்து வகாளி, அகோர வீரபத்திரர், ரதி, கார்த்தவீரியார்ஜூனன் சிற்பங்கள்உள்ளன.

மூலஸ்தானத்தில் சவுந்தரராஜப் பெருமாள், ஸ்ரீதேவி பூதேவியுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். கள்ளழகரே இங்கு எழுந்தருளியிருப்பதாகக் கருதப்படுவதால், மதுரையைப் போலவே, இங்கும் சித்ராபவுர்ணமியன்று சுவாமி குடகனாற்றில் இறங்குகிறார். இவ்விழாவின் போது மண்டூகருக்கு சுவாமி அருளிய வைபவம் பாவனையாக நடக்கும். ஒவ்வொரு திருவோண நட்சத்திரத்தன்றும் சுவாமி பாதத்தில் திருவோண தீபம் ஏற்றப்பட்டு விசேஷ பூஜை நடக்கும். பின், தீபம் முன்னே செல்ல, உற்சவமூர்த்தி பின்னே வலம் வருவார். இந்த தரிசனத்தைக் காண்பவர்கள் பாவவிமோசனம் பெறுவர் என்பது நம்பிக்கை. ஆடியில் பிரம்மோற்ஸவம் நடக்கும்.




அழகரை காண வருகை தரும் பக்தர்களை வரவேற்கிறோம்



இறைபணியில் P. முருகேசன் உரிமையாளர்

சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588



மதுரை பரமக்குடி மானாமதுரையில் நடைபெறும் சித்திரை திருவிழா கானவரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்.

எங்களிடம் சொந்த தறியில் நெய்த அசல் வெள்ளி ஜரிகையிலான பட்டு புடவைகள் வாங்க கைராசியான ஸ்தாபனம்



# பத்மாவதி சில்க்ஸ்

## S.G.J.டெக்ஸ்டைல்ஸ்



காஞ்சிபுரம், திருபுவனம், தர்மாவரம், ஆரணி, பனாரஸ், கோர்வை, பட்டு புடவைகள், பேன்சி சுடிதார், மில்சாரீஸ் மற்றும் ரெடிமேட் வாங்க

4(3/32), நயினார் கோவில் ரோடு, எமனேஸ்வரம்-623 701 பரமக்குடி வழி, ராமநாதபுரம் மாவட்டம்

தொலைபேசி எண்: 9842424657

aanmeegamalar.com

# வைத்திய ராஜா ஆதர்ச மருந்துவர்

# ஸ்ரீ தன்வந்திரி பகவான்

நோயில்லாத வாழ்வுக்காக நாம் வழிபட வேண்டிய விசேஷ தெய்வம் ஸ்ரீ தன்வந்திரி பகவான்.

இவர் மகாவிஷ்ணுவின் அவதாரம்.

தேவர்களுக்குப் பூரண வாழ்வை வழங்குவதற்காகத் திருப்பாற்கடல் கடையப்பட்டது அபோது கடலில் இருந்து காமதேனு ஐராவதம் கௌஸ்துபமணி மகாலஷ்மி போன்ற மங்கலமான அம்சங்களுடன் தன்வந்திரி பகவானும் அவதரித்தார் என்று புராணங்கள் கூறும்.

இவர் தன திருக்கரத்தில் வைத்திருக்கும் கலசத்தில் இருந்து வழங்கிய அமிர்தத்தை உண்டதனால்தான் தேவர்கள் பூரண ஆயுளைப் பெற்றார்கள். எனவே தன்வந்திரி பகவானை மருத்துவத் துறையின் பிதாமகன் என்பர்.

எந்த ஒரு தீராத நோய்க்கும் உடல் சம்பத்தப்பட்ட கோளாறுகளுக்கும் தன்வந்திரி பகவானை வழிபட்டு அவரது பிராச்சத்தைப் பெற்று உண்டால் நிவாரணம் பெறலாம் என்பது கண்கூடு.

அவருக்கு அபிஷேகம் செய்து அந்தத் தீரித்தத்தை உட்கொள்ளலாம். தவிர தன்வந்திரி பகவான் பிரத்தியேகமாக எழுந்துளியிருக்கும் சில ஆலங்களில் கிடைப்பதற்கு அறிய மூலிகைகளைக் கொண்டு தாயாரிக்கப்பட்ட லேகியம் போன்றவைகளை பிரசாதமாக தருகிறார்கள்.

சிறந்த பண்டிதர்களை வைத்து வீட்டிலேயே தன்வந்திரி ஹோமம் செய்யலாம். பிரம்மன் நான்கு வேதங்களையும் படைத்து அதன் சாரமாகிய ஆயுர்வேதத்தையும் படைத்தான், இந்த ஆயுர்வேதம் நன்றாகத் தழைத்தோங்கி பலரையும் அடைய வேண்டுமென முதலில் சூரிய பகவானுக்கு உபதேசித்தார்.

சூரிய பகவானிடம் இருந்து ஆயுர்வேதத்தைக் கற்றுத் தேர்ந்த பதினாறு மாணவர்களில் மிகவும் முக்கியமானவர் தன்வந்திரி என்று பிரம்ம வைவர்த்த புராணம் சொல்கிறது.



தன்வந்திரி என்று சொல்லப்படுபவர் வானத்தில் வசித்து வருபவர். அதாவது சூரிய பகவானே தன்வந்திரி என்றும் புராணங்களில் ஒரு குறிப்பு உள்ளது.

அதனால் ஞாயிறு மற்றும் வியாழக் கிழமைகளில் இவரை வழிபடுவது நல்லது.தன்வந்திரிதான் ஆயுர்வேதத்தை சிருஷ்டித்தார் என்கிறது மத்ஸ்ய புராணம்.

இவரை வைத்திய ராஜா ஆதர்ச மருந்துவர் இன்றும் குறிப்பிடுகிறது.

இவர் சுருண்டு காணப்படும் மென்மையான திருமுடி செவ்வரியோடிய கண்கள் வெண்சங்குக் கோடுகளுடன் கூடிய கழுத்து பரந்த மார்பு பட்டுப் பீதாம்பரம் மலர்மாலைகள் தரித்த ஆபரணத் திருமேனி நான்கு திருக்கரங்கள் மேல் இரு திருக்கரங்களில் சங்கு சக்கரம் தரித்து காணப்படுவார்.

கீழ் இரு திருக்கரங்களில் ஒன்றில் அட்டைப் பூச்சியையும் மற்றொன்றில் அம்ருத கலசத்தையும் தாங்கிக் காணப்படுவார்.

ஸ்ரீ தன்வந்திரி பீடத்தில் உள்ள பகவான் அட்டைப் பூச்சிக்கு பதிலாக ” சீத்தில் ” என்ற மூலிகைக் கோடியை ஏந்தியபடி காணப்படுகிறார்.

துளசி ஆலிலை அரசு இலை வில்வம் விஷ்ணு கிராந்தி நாயுருவி மருக்கொழுந்து பூர்ஜ இலை தேவ தாரு இலை போன்ற இலைகளும் செவ்வந்தி சண்பகம் பிச்சி பாரிஜாதம் தாமரை அரளி புன்னைப்பூ மந்தாரை போன்ற பூக்களும் இவரது பூஜைக்கு உரியவை மகாவிஷ்ணுவுக்குப் பிடித்தமான கோதுமை அல்வா அல்லது சுக்குவெல்லம் செய்து தன்வந்திரிக்கு நைவேதிப்பது சிறந்தது.


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
தன்வந்திரி
ஆயுர்வேத வைத்தியசாலை
அரசு பதிவு பெற்ற மருத்துவமனை
HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 • ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL
இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு
41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.
Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com
Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791

மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர் எதிர்புறம்,
அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி,
தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு,
MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர். காவல் நிலையம் பின்புறம். இராமநாதபுரம்.
அலைபேசி: 9944167183. 9360132498




தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics


aanmeegamalar.com

# திருமண தோஷம், தடை நீக்கும் அழகர் கோவில்

திருமாலிருஞ் சோலை யென்றும், தென்திருப்பதியென்றும் போற்றி அழைக்கப்பட்டும், ஆழ்வார்களால் புகழ்ந்துபாடப் பெற்றும் சிலப்பதிகாரத்தில் இத்திருக்கோவில் பெருமை யுடன் கூறப்படும் அழகர்மலை அழகரின் அற்புதங்கள் ஆயிரமாயிரம். இது பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ் வார், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்களால் மங்களாசனம் பெறப்பட்ட பெருமைக் குரிய புண்ணிய ஸ்தலமாகும். இக்கோவிலில் மூலவர் ஸ்ரீ பரம சுவாமி ஸ்ரீதேவி, பூதேவி நின்ற திருக்கோலத்தில் கிழக்கு முகம் பார்த்து காட்சி தருகிறார். தாயார் திருநாமம், கல்யாணசுந்தரவள்ளி தாயாரை திருமணம் தாமதப்படும் பெண்கள் வேண்டினால் திருமணம் விரைவில் நடைபெறுமென்பது ஐதிகம்.



சூடிக்கொடுத்த சுடர் கொடியாள் அழகான அழகர் மீது காதல் கொண்டு அழகரை திருமணம் செய்து கொண்டார். இதனால் தான் இத்தலத்தில் ஆண்டாள் (உற்சவர்) அமர்ந்த நிலை யில் உள்ளார். இத்தலத்தில் உள்ள சக்கரத்தாழ்வார் மிகவும் சக்தி வாய்ந்தவர், ஸ்ரீசுதர்சன மூர்த்தியின் மேலே இரணிய சம்கார கோலத்துடன் ஸ்ரீநரசிம்மர் காட்சி யளிப்பதுடன் காயத்திரி மந்திரங்கள் எல்லாம் பிம்பமாக இருப்பதும் இங்கு மேலும் தனிச் சிறப்பாகும்.

இதனால்தான் வேண்டுவோருக்கு வேண்டிய வரம் அளிக்கும் அழகர் மலை அழகர் என்று இன்றும் அழைக்கப் படுகிறார். மகாவிஷ்ணு தேவர்களை காப்பாற் றும் பொருட்டு வாமன அவதாரம் எடுத்து மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்டு பின்னர் திருவிக்கிர மராக பிரமாண்ட உருவெடுத்து மூவுலகையும் தனது இரண்டு அடிகளால் அளந்து மூன்றாவது அடியை மகாபலி சக்கர வர்த்தியின் சிரத்தில் வைத்து அமிழ்த்தினார் என்று புராண வரலாறு கூறுகிறது. அவ்வாறு மூவுலகையும் அளக்க

தனது திருப்பாதத்தை வான் நோக்கி உயர்த்தியபோது அந்த திருவடியை மகா விஷ்ணுவின் மகனாகிய பிரம்மா தந்தையின் பாதத்தை கமண்டல நீரினால் பூசித்தார். அப்போது திருவிக்கிரவ பகவானாகிய மகாவிஷ்ணுவின் திருப்பாதத்திலிருந்து ரத்தின பொற்சிலம்பு அசைந்து அதிலிருந்து நீர் துளிகள் அழகர்மலை மீது தெளித்தது. அதுவே சிலம்பாறாக பெருக்கெடுத்து ஓடியது. இதையே நூபுர கங்கை என அழைக்கப்படுகிறது. இந்த புனித நீரினால் தான் அழகருக்கு தினமும் பூஜையும் திருமஞ் சனமும் நடை பெறுகிறது. இந்த தீர்த்தமானது வற்றாத நீருற்றாக காலம் காலமாக வழிந்து . இதன் சுவை அமிர்தம் தங்கை மீனாட்சியின் திருமணத்திற்கு அண்ணன் பல்லக்கில் கள்ளர் திருக்கோலத் துடன் கொண்டிருக்கிறது போன்றதாகும்.

அழகர் தங்க மதுரைக்கு வருகிறார் என்றும் கூறப்படுவது ஒருபுறம் இருக்க, மண்டுக மகரிஷிக்கு மோட்சம் கொடுக்கும் பொருட்டும் வைகை யில் கள்ளழகர் எழுந்தருளுகிறார் என்பது புராண வரலாறு. இந்த சித்திரை திருவழாவின் போதுமதுரை மக்கள் மூன்று மாவடியில் எதிர் கொண்டு அழகரை எதிர்சேவை செய்து அழைத்து செல்கிறார்கள்.

தல்லா குளம் பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் கோவி லிலிருந்து ஆண்டாள் மாலையை அணிந்து குதிரை வாகனத்தில் புறப் பாடாகி 1000 பொன் சப்பரத்தில் எழுந்தருளி வைகை ஆற்றில் தங்க குதிரை வாகனத்தில் கள்ளழகர் இறங்கும் பொழுது வீரராகவ பெருமாள் அழகரை எதிர்கொண்டு அழைப்பார், பின்னர் சேஷவாகனத்தில் புறப்பாடாகி தேனூர் மண்டபத்தில் எழுந் தருளி தொடர்ந்து கருட வாகனத்தில் மண்டுக மகரிஷிக்கு சாப விமோசம் அளிக்கிறார். ராமராயர் மண்டபத்தில் விடிய விடிய தசாவதார நிகழ்ச்சி நடைபெறும். தல்லாகுளம் ராமநாத புரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் பூப்பல்லக்கு அலங் காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்து அழகர் மலைக்கு அழகர் சென்று இருப்பிடம் சேருகிறார். பக்தர்களை தேடிவந்து அழகர் வரம் தரும் விழாவாக கருதபடுகிறது.



அழகரை காணவரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்....!
ஓம் முருகா சாரீஸ் -ன்
ஓம் முருகா பட்டு மஹால்
•பட்டு சேலைகள் •பேன்ஸி சேலைகள் •ரெடிமேட்ஸ்
161, கீழமாசி வீதி, மதுரை - 1. ✆ 4382828




மாதம் இரண்டு முறை வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)”த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

175 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன


21.04.2024
சிறப்பிதழ்




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# ஆசியாவிலேயே மிகப் பெரிய பொற்கோயில்



உலக பிரசித்தி பெற்ற ஸ்ரீபுரம் தங்கக்கோயில் வேலூர் நகரத் தில் மாலைக்கொடி எனும் இடத் தில் அமைந்துள்ளது. மஹா லட்சுமிக் காக எழுப்பப்பட்டிருக்கும் இந்த கோயில் முழுதும் தங்க முலாம் பூசப்பட்டதாக காட்சி யளிக்கிறது.

இந்தக் கோவிலைமிகவும்சிரத் தையுடனும், மிகுந்த கலை நுணுக் கத்துடனும் மிக பிரம்மாண்டமான வகையில் ஆசியாவிலேயே முதல் கோவிலாக உருவாக்கியிருக்கிறார் நாராயணி அம்மா என்றும் அழைக்கப்படும் ஸ்ரீ சக்தி அம்மா.

கோவில்மட்டுமின்றி, மருத்துவ மனை, பள்ளிக்கூடம், கல்லூரி போன்ற சமுதாயப்பணிகளிலும் இவரின் பங்கு மிகப் பெரிய அளப்பறியாத வகையில் நீண்டு கொண்டே செல்கிறது.

இவரின் பெரும் முயற்சியால் இந்த தங்க கோவில் நட்சத்திர வடிவில், முழுவதும் தங்க நிறத்தில் ஜொலிக்கிறது. இந்தக் கோவிலை திருப்பதி திருமலை தேவஸ்தானத் திலிருந்து வரவழைக்கப் பட்ட கொல்லர்கள் மூலம் கோயிலின் மைய கோபுரம் தங்கத்தால் செய் யப்பட்டுள்ளது.

இந்த கோயிலை கட்ட 600 கோடி ரூபாய் செலவானதாக சொல்லப்படுகிறது. 1500 கிலோ தங்கம் பயன்படுத்தப்பட்டது என்றும் 55,000ம் சதுரடி பரப்பளவுக்கு தங்கக்கோயில் கட்டப்பட்டுள்ளது என்றும் சொல்லப்படுகிறது. தங்கக் கோலை சுற்றி 10 அடி அகலத்திற்கு தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. கோயிலுக்குள் நுழைந்தவுடன் ஒரு தனி மண்டபமும், அதன் எதிரே செயற்கை நீர் ஊற்றுக்களும் உள்ளது. .

மண்டபத்தின் பின்னால் மனிதனின் 18 வகையான குணங்களை தாண்டி இறைவனிடம் செல்வதை உணர்த்தும் வகையில் 18 நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீசக்கரத்தில் உள்ள நட்சத்திர அமைப்பில் இந்த லட்சுமிநாராயணி கோயில் உள்ளது. அந்த நட்சத்திரத்தின் நடுவில் வட்ட வடிவில் கோயில் உள்ளது. மேலே இருந்து, கோயிலை பார்த்தால் ஸ்ரீசக்கரம் போன்றே தெரியும்படி கோயிலை அமைத்துள்ளனர்.

இந்த அம்மன் எதிரே 27 அடி உயரத்தில் ஐம்பொன்னால் ஆன 10 அடுக்கு கொண்ட ஆயிரம் திரிகள் ஏற்றக்கூடிய விளக்கு உள்ளது. கோயிலை சுற்றிலும் புல்வெளியும், அதன் நடுவே சுதையால் ஆன துர்க்கையும், லட்சுமியும், சரஸ்வதியும், மாரியம்மன் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலுக்குளே செயற்கையான மலைகளும், குளங்களும், நீர்வீழ்ச்சிகளும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

நவீன விளக்குகள், பழங்கால மாட கல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் இரவை பகல் போல மாற்றுகின்றன. கோயிலுக்குளே ஏராளமான மரங்கள் பச்சைப்பசேல் என்று அருமையாக காட்சியளிக்கின்றன.

கோயிலுக்குள் பக்தர்கள் நடந்து செல்லும் வழியெங்கும் சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது. இந்த கோயிலில் உலகின் மிகப் பெரிய வீணையும், 10,008 திருவிளக்கும் அமைக்கப்பட்டுள்ளன. இது ஆசியாவிலேயே மிகப் பெரிய பொற் கோயிலாகும்.

HitamAstro
Occult Services Sole Proprietorship

+91 89255 39931
www.hitamastro.com

மதுரகாளியம்மன் துணை

# கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தை பற்றி சிந்தியுங்கள்

**வணக்கம் நான் உங்கள் டாக்டர்.**

## ஆஸ்ட்ரோ ஆச்சார்யா V S ஹரி ஹர சுதன்,

ஹிதம்ஆஸ்ட்ரோ வின் நிறுவனர். ஹிதம் ஆஸ்ட்ரோவின் மூலம் நாங்கள் இந்த பிரபஞ்சத்தின் மர்மங்களை திறந்து, உங்கள் வாழ்க்கையின் திருப்பங்களில் வழிநடத்த உதவுகிறோம். எங்கள் வழிகாட்டுதலுடன், உங்கள் பாதையில் தெளிவு, நம்பிக்கை மற்றும் ஆழமான புரிதலைப் பெறுவீர்கள்.

ஹிதம்ஆஸ்ட்ரோவில் நாங்கள் கீழ் கண்ட சேவைகளை வழங்கி வருகிறோம்.

**ஜோதிட ஆலோசனை** நாங்கள் 4வது தலைமுறை ஜோதிடர்கள் மற்றும் எங்கள் 26 வருட சேவைகளுடன், நாங்கள் சிறந்த ஜோதிடம், எண் கணிதம், பெயர்வியல் மற்றும் ரத்தினவியல் ஆலோசனைகளை வழங்கு கிறோம். சிறந்த மற்றும் பயனுள்ள சேவைகளுக்கு, எங்கள் அனுபவம் வாய்ந்த ஜோதிடர்கள் மற்றும் பணிகர் களை தொடர்பு கொள்ளவும்.

**ஜோதிட பயிற்சி** நீங்கள் ஜோதிட உலகில் நுழைந்து, அதில் ஆழமாக பயணிக்க விருப்பமா?. நாங்கள் சிறந்த பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, விரிவான பயிற்சியை வழங்கி வருகிறோம்.....! ஜோதிடப் பயிற்சியைப் நீங்கள் முதலீடாக நினைத்தால், ஹிதம்ஆஸ்ட்ரோவின் மூலம் மாதம் வீட்டில் இருந்ததே 30,000 முதல் 1 லட்சம் வரை வருமானத்தை எதிர்பார்க்கலாம்.

**யந்திரங்கள் – ஹோமங்கள்** யந்திரங்கள் மற்றும் ஹோமங்கள் இரண்டும் ஆன்மீக நடைமுறைகளில் ஒருங்கிணைந்த பாத்திரங்களை வகிக்கின்றன, தெய்வீகத்துடன் இணைவதற்கும் வாழ்க்கையின் பல்வேறு ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கும் வழிகளை வழங்குகின்றன. நாங்கள் மந்திரங்கள் மற்றும் சடங்குகள் பற்றிய சிறந்த அறிவைக் கொண்ட பண்டிதர்களாக இருக்கிறோம், மேலும் புனிதத்தைப் பேணுவதற்கும், தெய்வங்களை அழைப்பதற்கும், வழிகாட்டுதலை வழங்குவதற்கும் ஹிதம்ஆஸ்ட்ரோவின் மூலம் யந்திரங்கள் மற்றும் ஹோமகளின் சேவையை பெறுங்கள்.

**ஜோதிட பரிஹார பொருள்கள்:** ஹிதம்ஆஸ்ட்ரோவில் நாங்கள் உங்களின் எதிர்மறையான தாக்கங்களை தடுக்கவும், நேர்மறையான ஆற்றல்களுடன் உங்களை இணைக்கவும், பல புனிதமான பொருட்களை (ரகைஷ, தாயத்துகள் தசாபுத்தி சிலைகள் மற்றும் நாணயங்கள்) வழங்கி வருகிறோம். எங்கள் பரிஹார பொருள்கள் உங்களிடம் இருந்தால் விலையுயர்ந்த பரிகாரங்கள் அல்லது பொருள் பங்களிப்புகளை பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இந்த பரிஹார பொருள்கள் உங்கள் வாழ்க்கையில் ஒரு பயனுள்ள தீர்வை மற்றும் நேர்மறையான மாற்றங்களை விரைவாகவும் நம்பகத்தன்மையுடனும் ஏற்படுவதை உறுதி செய்கிறது.

மேலும் விவரங்களுக்கு எங்களுது இணையதளம் மூலம் எங்களை அணு குங்கள் அல்லது கீழ் கண்ட தொலைபேசி எண்ணில் எங்களை அழைக்கவும்.

**உங்கள் சேவையில் என்றும் நாங்கள் ஹிதம்ஆஸ்ட்ரோ**



**Dr Astro Acharya**
**V.S.Hari Hara Sudan**
**CEO – Hitam Astro**

**Website: www.hitamastro.com**

**Phone: 8925539937 / 8925539931 / 8248743293 / 8925539932**

aanmeegamalar.com





மானாமதுரையில் ஹோட்டல்

ஸ்ரீ பழனிஸ்

சைவம்

அனைத்து சைவ உணவு வகைகளும் மற்றும்
சைனீஸ், வடஇந்திய உணவு வகைகளும்
தங்களது இல்ல விழாக்களுக்கு
ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்











மகிழ்ச்சியுடன் வாருங்கள்
மனநிறைவோடு செல்லுங்கள்
அன்புடன் அழைக்கும்
செல்: 8098097273
மெயின் ரோடு மானாமதுரை

# அருள்மிகு ஸ்ரீகள்ளழகர், மதுரை







அருள்மிகு கள்ளழகர் பாலிடெக்னிக் கல்லூரி

ஆட்டுக்குளம், மேலூர், மதுரை மாவட்டம்

நிறுவனர் : பச்சேரி சி.ரெத்தினம் பிள்ளை

துவக்கம் 1985

CRS HOUSING PVT LTD., Chennai

RRR CONSTRUCTIONS Chennai

VIJAY AGRO PRODUCTS Chennai

ஆஸ்ட்ரோ ஆச்சார்யா VS ஹரி ஹர சுதன் கணிப்பில்

# 2024 குருபெயர்ச்சி பலன்கள்

வணக்கம், ஆண்டுக்கு ஒருமுறை குரு பெயர்ச்சி நிகழும் என்றாலும் சில மாதங்கள் அதிசாரமாகவும் சில மாதங்கள் வக்ரகதியிலும் செல்வார். குரு பகவான் கோச்சாரப்படி ராசிக்கு 2,5,7,9,11ம் வீட்டில் சஞ்சரித்தால் நன்மைகளை செய்வார்.

குரு பகவான் மேஷ ராசியிலிருந்து வெளியேறி ரிஷப ராசிக்கு, மே 1, 2024 அன்று, மதியம் 1:49 மணிக்கு மாறுகிறார், அதன் பிறகு ஜூன் 12 ஆம் தேதி ரோகிணி நட்சத்திரத்தில் சஞ்சரிப்பார். அதே நேரத்தில், வியாழன் அக்டோபர் 9 ஆம் தேதி வக்ர பெயர்ச்சி அடைந்து பின்னர் பிப்ரவரி 4, 2025 வகாரநிவர்தி பெறுகிறார். இதற்குப் பிறகு, மே 14 (இரவு 10:36 மணி), 2025 வரை ரிஷபத்தில் நேர்கதியில் சஞ்சரிப்பார்...

இனி ராசியின் அடிப்படையில் பொதுவான குரு பெயர்ச்சி பலன்களை காணலாம்.

**மேஷ ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் உங்களின் ராசிக்கு 2ம் வீட்டில் பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் 6ம், 8ம் மற்றும் 10ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் நீதிமன்ற வழக்குகள் வெற்றி கிட்டும், எதிரிகள் தொல்லை அகலும், உங்கள் நீண்ட கால நோய் குணமாகும், திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும்., தொழில் வாழ்க்கையில் முன்னேற்றம், தந்தையின் ஆரோக்கியம் போன்ற நல்ல விஷயங்கள் காணப்படும். எனவே மே 2024 முதல் மே 2025 வரை இந்த பலன்கள் நல்ல முறையில் இருக்கும்,..



**ரிஷப ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு பெயர்ச்சியாகிறார். குரு உங்களின் 5ம், 7ம் மற்றும் 9ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் தேடி வரும், சுயகௌரவம் மேம்படும், குழந்தைகளிடமிருந்து நன்மை கிட்டும் அல்லது நன்மை பயக்கும் செய்திகள் வரும், கல்வியில் முன்னேற்றம் அல்லது உயர் கல்விக்கான வாய்ப்புகள் வரும். வியாபாரம், தினக்கூலி, கூட்டாண்மை, ஆன்மீக முயற்சி, குறுகிய கால வெளிநாட்டுப் பயணம் போன்றவை நன்மை பயக்கும்.

**மிதுன ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 12ம் வீட்டில் பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் 4ம், 6ம் மற்றும் 8ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் வெளிநாட்டிலிருந்து ஆதாயம், அல்லது பயணத்திற்கான வாய்ப்புகள். மருத்துவச் செலவும் எதிர்பார்க்கப்படுகிறது, எனவே உங்களால் முடிந்தவரை சேமித்து முன்னுரிமைகளில் செலவிடுங்கள். தாய்க்கு நல்ல ஆரோக்கியம் ஏற்படும்,சொத்து அல்லது வாகனம் வாங்கும் வாய்ப்பை ஏற்படுத்தும். எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல ஆரோக்கியம் ஸீவீ கிட்டும். போட்டித் தேர்வுகளுக்குத் வெற்றி உண்டாகும்.

**கடக ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 11ம் வீட்டில்பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் 3ம், 5ம் மற்றும் 7ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் உங்களுக்கு தரல பண புழக்கம், செய் தொழில் வெற்றி, தகவல் தொடர்பு மற்றும் விசா சிக்கல்கள் ஏதேனும் இருந்தால் கடின உழைப்பு மற்றும் முயற்சிக்குப் பிறகு வெற்றி. சமூக ஊடகங்கள் அல்லது ஆன்லைன் தளங்களில் வெற்றி. உடன்பிறந்தவர்களுடன் உறவு மேம்படும், உயர்கல்வி, குழந்தைகளால் நன்மை அல்லது குழந்தை கருத்தரித்தல் சாத்தியமாகும்.

**சிம்ம ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 10ம் வீட்டில்பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் 2ம், 4ம் மற்றும் 6ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் தொழில் வளர்ச்சி, , தந்தையால் ஆதாயம் மற்றும் தந்தைக்கு மற்றும் ஜாதகருக்கு நல்ல உடல் நிலை, அரசு மூலம் ஆதாயம், சம்பள உயர்வு, திரு மணம், இனிமையான பேச்சு, குடும்ப மகிழ்ச்சி, எதிரிகள்/ வழக்குகளில் வெற்றி. தொழில் வளர்ச்சி கிட்டும். சொத்து முதலீடு எதிர்பார்க்கலாம்.

**கன்னி ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 9ம் வீட்டில் பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் ராசி, 3ம் வீடு மற்றும் 5ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் சுய மரியாதை மேம்படும், அனைத்து பகுதிகளிலிருந்தும் நிதி வரவு, நல்ல தொழில் வளர்ச்சி, மனைவியால் ஆதாயம், குழந்தைகளால் மகிழ்ச்சி, உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். துணையுடன் உறவு மேம்படும். குறுகிய கால மற்றும் நீண்ட கால வெளிநாட்டு பயணம் சாத்தியமாகும். உங்கள் மேலதிகாரிகள் அல்லது மூத்தவர்களிடமிருந்து ஆதரவு அதிகரிக்கும். நல்ல ஆரோக்கியம் மற்றும் சுய முன்னேற்றம் உங்கள் கவனத்தில் இருக்கும்.

**துலாம் ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 8ம் வீட்டில் அஷ்டம குருவாக பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் ராசிக்கு 12ம், 2ம் மற்றும் 4ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் ஆன்மீக ஆராய்ச்சி துறைகளில் நீங்கள் பயனடையலாம். வெளிநாட்டு பயணங்கள் மற்றும் சம்பள உயர்வு, உணவுப் பழக்கவழக்கத்தில் முன்னேற்றம். திருமண, குழந்தைப் பேறு மற்றும் இல்லற மகிழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

**விருச்சிக ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 7ம் வீட்டில்பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் ராசி, 11ம், மற்றும் 3ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் இந்த காலகட்டத்தில் உங்கள் திருமண உறவு மேம்படும் மற்றும் வணிக வளர்ச்சி ஏற்படும். பணியிடத்தில் உங்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சிகளுக்கு அங்கீகாரமும் வெற்றியும் கிடைக்கும். உங்கள் வாழ்க்கை துணையின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் யோகா மற்றும் தியானம் தொடர்பான தலைப்புகள் பற்றி படிக்க விரும்பலாம். நீங்கள் ஆன்லைன் வணிகம், மார்க்கெட்டிங், டிஜிட்டல் மார்க்கெட்டிங், தகவல் தொடர்பு நிபுணர் அல்லது விளம்பரம் போன்றவற்றில் இருந்தால்,




No.:2 Raghava Lakshmy Apartments, Raghavan street, Bhavani Nagar, Ayapakkam, Chennai - 600077.
+91 7339175496
sudancool2001@gmail.com


உங்கள் தொழில் வளர்ச்சியடையும்.

**தனுசு ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 6ம் வீட்டில்பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் 10ம், 12ம் மற்றும் 2ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் உங்கள் திறமை யால் எதிரிகளை வென்று செழிப்பும் சாதனைகளும் பெறுவீர்கள். இருப்பினும், உங்கள் அறியாமையின் காரணமாக கடன் மற்றும் கடன் தொடர்பானசிக்கல்களை கொடுக்கலாம் மற்றும் நிதி நிர்வாகத்தின் மதிப்பை நீங்கள் உணர்வீர்கள்.

**மகர ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 5ம் வீட்டில்பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் ராசி, 9ம், மற்றும் 11ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் நீங்கள் பிரசவம்/கர்ப்பத்தை எதிர்பார்க்கிறீர்கள் என்றால், இந்த காலம் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். உங்கள் காதல் வாழ்க்கை வலுவடையும், புதிய திட்டங்கள், வளர்ச்சி மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றைப் பெறுவதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உயர்கல்வி விஷயங்களில் முன்னேற்றம் மற்றும் உங்கள் குழந்தைகளும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவார்கள். உடல் பயிற்சி மற்றும் மந்திரம் உச்சரிக்கும் பழக்கம் எதிர்பாராத மாற்றத்தை வழங்கும்.

**கும்ப ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 4ம் வீட்டில் அதர்ஷத குரு வக பெயர்ச்சியாகிறார். குரு உங்களின் 8ம், 10ம் மற்றும் 12ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் நல்ல செய்தியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். நல்ல பழக்கவழக்கங்களும், குடும்பத்தினரின் ஆதரவும் உங்களை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும். எதிர்பாராத புதிய மாற்றத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இருங்கள். எதிர்பார்த்த ஒப்பந்தமும் நன்மையும் உங்க ளுக்கு சாதகமாக வரும். தாயின் உடல்நிலை மேம்படும்.

**மீன ராசி** நேயர்களே, மே 1, 2024 முதல் குரு உங்களின் ராசிக்கு 3ம் வீட்டில் பெயர்ச்சியாகிரர். குரு உங்களின் 7ம், 9ம் மற்றும் 11ம் வீடுகளை பார்வை இடுகிறார். இதன் மூலம் ஆன்லைன் வணிகம், வெகுஜன ஊடகம், சமூக ஊடகம், ஆன்லைன் வேலை அல்லது வணிகம் ஆகிய விஷயங்களில் உங்கள் நிலையான கடின உழைப்பு பலனளிக்கும். அங்கீகாரத்தைப் பெற நீங்கள் கூடுதல் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். உங்கள் மனைவியு / கனவனுடனன உறவு மேம்படும் மற்றும் நீங்கள் அவர்களிடமிருந்து சில நன்மைகளைப் பெறலாம். உங்கள் வணிகத்தை விரிவுபடுத்த, ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு செய்ய நல்ல காலம். ஆன்மிக நடவடிக்கைகளில் ஆர்வம் அதிகரிக்கும்.




எல்லாப் புகழும் இறைவனுக்கே!
நேர்மையாய், துணிவாய், உண்மையாய்,
உழைக்கிற கரங்களே! அழகிய கரங்கள்.
டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம்

AnnaA Gold™

சமையல் எண்ணெய் தயாரிப்பாளர்கள்
செல் : 98420 85666
1186 - பாஞ்சுபீர் ஒலியுல்லாஹ் தர்ஹா, கன்னார் தெரு, மானாமதுரை - 630606

# மதுரை மீனாட்சியின் சிறப்பும் அசந்து போன வெளிநாட்டு ஆய்வாளரும்

- மீனாட்சி அம்மனின் மற்றொரு பெயர் அங்கயற் கண்ணி,
- மீனாட்சி அம்மனின் அப்பா, அம்மா மலயத்துவசன், காஞ்சனமாலை,
- மீனாட்சி அம்மனின் சிலை மரகதக் கல்லினால் ஆனது.
- மீனாட்சி அம்மன் வலது கையில் கிளி வைத்திருப்பார்,
- மீனாட்சி அம்மன் கோயில் குளத் தின் பெயர் பொற்றாமரைக் குளம்,
- மீனாட்சி அம்மன் கோயில் விமானத்தின் பெயர் இந்திர விமானம்.
- பஞ்ச சபைகளில் மீனாட்சி அம் மன் கோயிலில் உள்ள சபையின் பெயர் வெள்ளியம்பல சபை.
- மீனாட்சி அம்மன் கோயிலில்கால் மாறி நடனமாடியவர் நடராஜர்.
- மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள மிகப்பெரிய விநாயகர் பெயர் முக்குறுணி விநாயகர்.
- மதுரையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்த நாயன்மார் மூர்த்தி நாயனார்,
- நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என கூறியவர் நக்கீரர்.
- மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள கோபுரங்கள் எத்தனை தெரியுமா? மொத்தம் 14 கோபுரங்கள். மீனாட்சி அம்மன் கோயிலின் மிக உயரமானது தெற்கு கோபுரம்.
- மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள உலக புகழ்பெற்றது ஆயிரங்கால் மண்டபம்.
- மீனாட்சி அம்மன் கோயில் புதன் ஸ்தலமாகும்.



## வெளிநாட்டு அறிஞர் ஆராய்ச்சி

மதுரை மீனாட்சி குங்குமம் காந்தசக்தி மிக்கது என்கி றார் இங்கிலாந்து அறிஞர் சார்லஸ் டபிள்யூ லெட்பீட்டர். இவர் ஒருமுறை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வருகை தந்தார். அங்கே அவருக்கு குங்கும பிரசாதம் கொடுத் தார்கள்.

அடுத்து, சுந்தரேஸ்வரர் சந்நிதிக்கு சென்ற போது விபூதி தரப்பட்டது. இதை ஏன் இந்திய மக்கள் நெற்றியில் இட்டுக் கொள்கிறார்கள் என் பதை அறிய அவருக்கு ஆவல். உடனே, அதை பரிசோதனை செய்தார். அவற்றி லிருந்து காந்தசக்தி வெளிப்பட்டதை உணர்ந்தார்.


இது என் வாழ்வில் நான் கண்ட அதிசயம் எனதான் எழுதிய தி இன்னர் லைப் என்ற புத்தகத்தில் எழுதினார். இதை விட அதிசயம் ஒன்று உண்டு என்றும் அவர் சொல்கிறார்.

சில ஆண்டுகள் கழித்தபிறகு, அந்த குங்குமம், விபூதியை பரிசோ தனை செய்தார். அப்போதும், முன்பு கண்ட அதே அளவு காந்தசக்தி சற்றும் குறையாமல் வெளிப்படுவது கண்டு அசந்து போனார்.

இப்படி ஓர் அதிசயத்தை நான் எந்த நாட்டிலும் கண்டதில்லை என்று அவர் எழுதி வைத்திருக்கிறார்.

நாம், மீனாட்சி குங்குமத்தை கோயில் தூண்களில் கொட்டி வைத்து பாழாக்கிக் கொண்டிருக்கிறோம்.

இனிமேலாவது, அன்னையின் குங்கு மத்தை அளவோடு வாங்கி, பூஜையறையில் பத்திரமாக வைப்போம். அன்னையின் அருட்கடாட்சம் என்று நிலைத்திருக்கச் செய்வோம்.



ஸ்ரீஆண்டாள் சில்க்ஸ்
சுபமுகூர்த்தபட்டு சேலைகள் மற்றும் காட்டன் சேலைகள் உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள்
ஆர்டரின் பேரில் அசல் வெற்றி ஜரிகைபட்டு சேலைகள் எங்களின் சொந்த தறியில் நெய்து தரப்படும்
நயினார்கோவில் ரோடு, நேருஜி மைதானம், பெருமாள் கோவில் பஸ் ஸ்டாப், எமனேஸ்வரம்-623 701, (பரமக்குடி வழி) இராமநாதபுரம் மாவட்டம்
சித்து. S.J.கோவிந்தன் cell: 9788764507/8608436223/9344136687


aanmeegamalar.com

# சகலசவுபாக்கியம் தரும் சதாசிவ பிரம்மேந்திராள்





மானாமதுரையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆண், பெண் உருவில் உள்ள ஸ்ரீ சதா சிவ பிரமேந்திராள் சன்னதி தற்போது புதிதாக முழுவதும் கருங்கற்களினால் கட்டப்பட்டு உள்ளது. மானசசஞ்சரே என்று பாடிய ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் என்ற மகான் ஒரே நேரத்தில் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவில், ஓம்கார், வாரணாசி ஆகிய இடங்களில் மட்டும் ஓர் ஜோதி வடிவில் ஆனந்தவல்லி சோமநாதருடன் காட்சி அளித்ததாக கூறப்படுகிறது.

அவருடைய பூத உடல் ஜீவ சமாதி நெடூரில் உள்ளது. இங்குள்ள ஸ்ரீ சதா சிவ பிரம்மேந்திராள் ஜோதி ரூபத்தில் காட்சி அளித்த இடத்தில் பீடம் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்பு மனமுருகி வழிபடுபவர்களுக்கு மன நிம்மதி கிடைப்பதோடு தீராத நோய்களும் நீங்குவதாகவும் நம்பப்படுகிறது.

ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் மூன்று நாட்கள் இந்தியாவில் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் இசை ஆராதனை விழா நடத்துகின்றனர். புதிதாக இசை கற்பவர்கள் இங்கு வந்து வழிபட்டால் இசை பயிற்சியில் கலந்து கொண்டு ஏராளமானோர் புகழ் அடைந்து உள்ளனர். உலகம் முழுவதிலும் உள்ள கர்நாடக இசை வித்வான்கள் இதில் கலந்து கொண்டு இசை ஆராதனை விழா மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கோவிலில் நடைபெறுவது தனி சிறப்பாக உள்ளது. வரும் மே 16, 17ல் பிரம்மேந்திரர் ஆராதனை விழா நடைபெறுகிறது.



# தாளம் இல்லா சம்பந்தர்



மயிலாடுதுறையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள சித்தர்காட்டில் இறைவன் பிரம்மபுரீஸ்வரராகவும், இறைவி திரிபுரசுந்தரியாகவும் தரிசனமளிக்கின்றனர். இத்தலம் சம்பந்தர் கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

ஞானசம்பந்தர் கூப்பிய கரங்களுடன் காட்சியளிக்கிறார். அதனால் அவர் கையில் தாளம் இல்லை. பிராகாரத்தில் சமயக்குரவர்கள் நால் வரும் நின்றபடி இருக்க, சேக்கிழார் அமர்ந்தபடி கைகூப்பி காட்சியளிப்பது


கீதா சமையல்



geetha samayal
YouTube
channel
ஆயிரம் சமையல்
வீடியோக்கள் உள்ளன

மதுரை ஸ்ரீ கள்ளழகர்
மானாமதுரை
ஸ்ரீ வீரஅழகரை
காணவருகை
தரம் பக்தர்களே
வருக வருக



ஸ்ரீ மாரீஸ் ஸ்டோர் தயாநகர், மானாமதுரை
ஸ்ரீ மாரீஸ் ரியல் எஸ்டேட் தயாநகர், மானாமதுரை
ஸ்ரீ மாரீஸ் வெல்டிங், கொன்னக்குளம், மானாமதுரை

A.சுரேஷ்குமார் 9751612979
A.பூமிநாதன் 8122522570
A.S.கமலேஸ்வரன் 9080075007



ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை
மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்
பீனாஸ் பத்திர எழுத்தகம்
பத்திர எழுத்தர்



Prop.N.P.வேல்முருகன் B.Com
State Document Writer
செல்: 99526 39497
95851 88741

RAINBOW SOLAR POWER
சூரியன் உங்கள் மின்
கட்டணத்தை செலுத்தட்டும்



ரெயின்போ சோலார் பவர்
(Mnre National Portal Vendor) PM-Surya Ghar: Muft Bijli Yojana

திட்டத்தில் அரசு வழங்கும் மானியம் 1கிலோவாட் ரூ.30,000, 2 கிலோவாட் ரூ.60,000, 3 கிலோவாட் ரூ.78,000 அதற்கு மேல் அனைத்து வீட்டு மின் இணைப்பு உரிமையாளர்களும் இத்திட்டத்தில் பயன்பெறலாம். மேலும், பள்ளி, கல்லூரிகள் கடைகள் தொழில்சாலைகள், மற்றும் விவசாய மோட்டார் எல்.இ.டி சோலார் தெருவிளக்குகள் அமைத்து தரப்படும்.

ரெயின்போ சோலார் பவர் மானாமதுரை 9171595790 / 9585409690


aanmeegamalar.com





# மதுரையை சுற்றி வரும் நவநீத பெருமாள்



முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் கோவில் மிக அருகில் திருகூடல்மலையில் உள்ள ராமலிங்கம் விலாசத்தில் கட்டிக்குளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி, சோமப்பா சுவாமி போன்ற ஜீவசமாதி கோவிலில் சித்தர்கள் வழிபட்ட நவநீத பெருமாள் மற்றும் தண்டாயுதபாணி, ஆஞ்சநேயர் சன்னதிகள் உள்ளது.

இங்கிருந்து சித்தர்கள் ஒரேநேரத்தில் மீனாட்சி அம்மன் கோயில், அழகர் மலை, யானைமலையில் தவம் இருந்து தரிசித்து உள்ளனர்.

இங்கு உள்ள நவநீதபெருமாள் குதிரை வாகனத்தில் ஆடிபௌர்ணமி தினத்தில் புறப்பட்டு மதுரையைசுற்றியுள்ள ஊர்களில் பக்தர்களுக்கு வரம் தரவும் அருள் தரவும் புறப்பட்டு சுமார் 25 ஊர்களில் வலம் வந்து மீண்டும் கோவில் வந்தடைவார்.

சுவாமி புறப்பட்டு வர 25 நாட்கள் ஆகும். நவநீதபெருமாள் செல்லும் ஊர்களில் எல்லாம் பக்தர்கள் திரண்டு வணங்கி வரவேற்பு கொடுப்பார்கள்.

நவநீதபெருமாள் தங்கள் ஊர்களில் தங்கி அருள் ஆசி வழங்குவதை பெருமாள் நேரில் காட்சிஅளித்ததுபோல் பெரும் பாக்கியமாக கருதுகின்றனர்.

இதுதவிர வைகுண்ட ஏகாதசி அன்று நவநீத பெருமாள் தசாவதாரம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஆலய தகவல் பற்றி அறிய 9842124841 மேலும் ஆலயதகவல் பற்றி அறிய செல்9842124841.




ஸ்ரீ லெட்சுமி
ஆட்டோ ஸ்பேர்ஸ்
அனைத்து டூவீலர் வாகனங்களுக்கும் உதிரி பாகங்கள் குறைந்த விலையில் கிடைக்கும் சேல்ஸ் & சர்வீஸ்
சாஸ்தா நகர், சிவகங்கை மெயின்ரோடு மானாமதுரை-630 666
புதிய கிளை: தாகியார்நகர், மானாமதுரை
96989 55068 /99521 24373

D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்



பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606
செல்: 98424 09829

# ஸ்ரீராமர் பாதம் பட்ட திருத்தலங்கள்



ராமநாதபுரம் மாவட்டத்தில் பழமை வாய்ந்த பெருமாள் திருத்தலங்கள் வெளியில் தெரியாத ஏராளமான ஆலயங் கள் அமைந்துள்ளன. அவற்றில் நாம் அறிந்தவரை உள்ள ஆலயங்கள் பற்றியும் வழித்தடம் விபரம்

- திருப்புல்லாணி ஆதி ஜெகநாதப் பெருமாள் திருக் கோயில் 108 திவ்ய தேசங்களில் 44 வது திவ்ய தேசம் வைணவர்களின் மிகவும் புனிதமாகவும் புண் ணியம் வாய்ந்த்தாகவும் போற்றப்படும் பெருமை மிக்க ஆலயம் ராமாவதாரத்தில் விபீஷணன் சரணா கதி சேது பந்தனம் ராமலிங்க பிரதிஷ்டை என முப்பெரு மையுடைய தலம் இராமநாதபுரத்திலிருந்து 13 கி.மீ
- சேதுக்கரை சீனிவாச பெருமாள் மிகவும் பழமை வாய்ந்த ஆலயம். வெள்ளை பளிங்கு கல்லாலான பெருமாளின் திருமேனி பார்க்க பார்க்க அழகு திருப்பணி நடைபெற்று தினசரி பூஜைகள் நடைபெற பெருமாளின் அருள் வேண்டி பிரார்த்தனை செய் வோம்.
- இராமேஸ்வரம் சேது மாதவ பெருமாள் பாரத தேசத்தில் புண்ணியம் மிக்க நான்கு மாதவ தலங்களில் தெற்கே அமைந்துள்ள ஒரே தலம் சேது மாதவம் இராமேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீஇராமநாத சுவாமி ஆலயத்தில் உள்ளே அமைந்துள்ள தனிச் சன்னதியில் அருள்புரிகிறார்.
- கொத்தங்குளம் சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில் வைணவர்களின் மிகவும் முக்கியமான ஆச்சாரியரான மணவாள மாமுனிகள் அவதார தலம் அவரது தாயார் பிறந்து வாழ்ந்த ஊர் அழகிய திருக்கோயில் இராமநாதபுரம் மாவட்டம் சிக்கலில் இருந்து 3 கி.மீ
- தேவிபட்டினம் கடலடைத்த பெருமாள் ராமாவதாரத்தில் ராமச்சந்திர மூர்த்தி தேவிபட்டினத்தில் கடலில் நவ கிரகங்களை பிரதிட்டை செய்து வழிபட கடல் அலையை நிறுத்தியதால் இந்த பெருமாள் கடலடைத்த ஆதி ஜெகநாதன் என்று வழிபடப்படுகிறார் அழகியதொரு ஆலயம்
- சக்கரவாள நல்லூர் ஆதி கேசவப் பெருமாள் திருக் கோயில் பெருந்தேவி தாயார் என்ற ஒரே பத்தினியுடன் பெருமாள் ஆஜானு பாகுவாக நின்ற கோலத்தில் வரத முத்திரையுடன் மிகுந்த வரப்பிரசாதியாக அருள்பாலிக்கிறார் இராமநாதபுரத்திலிருந்து 10 கி.மீ
- குளத்தூர் சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில் பூமி நீளா சமேத சுந்தரராஜப்பெருமாள் அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கும் அழகிய ஆலயம் இராமநாதபுரத்தில் இருந்து 10 கி.மீ
- ஆதங்கெத்தங்குடி சீனிவாசப் பெருமாள் ஸ்ரீ தேவி பூமி தேவி சமேத சீனிவாசப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகின்ற ஆலயம் இராமநாதபுரம் மாவட்டம் தேரிருவேலி அருகில் அமைந்துள்ளது.



- மாரந்தை பூவராக பெருமாள் மடியில் பூமா தேவியை அமர்த்திய திருக்கோலத்தில் வராக பெருமாள் எழுந்தருளி அருள்பாலிக்கும் பழமை வாய்ந்த ஆலயம் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி அருகே அமைந்துள்ளது.
- தொண்டி உந்தி பூத்த பெருமாள் கோயில் பெருமாள் தனது இரண்டு தேவிமார்கள் சகிதமாக நின்ற கோலத்துடன் அருள்பாலிக்கிறார் .
- முகிழ்த்தகம் சொர்ண வருஷம் பெய்த பெருமாள் கோயில் பெருமாள் இரு தேவியர்கள் சகிதமாக அருள்புரிகிறார் தொண்டி அருகே அமைந்துள்ளது ஆலயம்
- கதைக்குளம் பெருமாள் கோயில் உத்தரகோசமங்கை அருகில் உள்ள ஆலயம்
- கோடனூர் கரிய மாணிக்கப் பெருமாள் கோயில் இராஜ சிங்க மங்கலம் அருகே உள்ள ஆலயம்
- கள்ளவழியேந்தல் பிருந்தாவனநாத பெருமாள் கோயில் திருவாடானை அருகே அமைந்துள்ளது
- கட்ட விளாகம் வரதராஜப் பெருமாள் கோயில் தொண்டி அருகே அமைந்துள்ளது
- பரமக்குடி அருள்மிகு ஸ்ரீ சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில்
- எமனேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில்
- இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயில்



- தங்கச்சி மடம் அருள்மிகு ஸ்ரீ ஏகாந்தராமர் கோயில்
- தனுஷ்கோடி அருள்மிகு ஸ்ரீ கோதண்டராமர் கோயில்
- கள்ளிக்குடி பெருமாள் கோயில் தேவி பட்டினம் அருகில் உள்ள ஸ்ரீ தேவி பூமி தேவி சமேத பெருமாள் பழமை வாய்ந்த அர்ச்சா மூர்த்தி. இன்னும் பல ஆலயங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள் ளது.


அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை
M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்
A.T.T.லாட்ஜ் அகிலா காம்ப்ளக்ஸ்





அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்
பைபாஸ்ரோடு, மானாமதுரை
மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்



L.சுரேஷ் S.அண்ணாமலை
செல்: 98424 68215 / 73737 68215







# திருப்பதி ஏழுமலையான் காட்சியளித்த அப்பன் பெருமாள் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்றுகரையில் உள்ள பிரசித்தி பெற்ற, சுமார் 400 ஆண்டுகள் பழமையான அப்பன் பெருமாள்கோவில் ஆகும்.

இங்கு ஸ்ரீதேவி பூதேவியுடன் திருப்பதி வெங்கடாஜலபதியே நேரில் காட்சி தருவ தாக பக்த்தர்களால் நம்பப்படுகிறது. திருப்பதி ஈழுமலையானின் தீவிர பக்தர் ஒரு வருக்கு காட்சி அளித்த தலமாக கூறப்படுகிறது.

திருப்பதி வெங்கடாசல பதிக்கு அன் றாடம் சேவை செய்யும் பிராமனர்" ஒருவர் மானாமதுரை வழியே ராமேசுவரம் தீர்த்த யாத்திரைக்கு செல்லும் வழியில் வைகை ஆற்றங்கரையில் இரவு பொழுதில் தங்கி யாத்திரை தொடங்கலாம் என முடிவு செய்து ஓய்வு எடுத்தார்.

தினமும் திருப்பதி வெங்கடேச பெருமாளுக்கு சேவிக்கும் அடியேன் தீர்த்த யாத்திரை வந்ததால் பல நாட்களாக ஏழுமலையானை தரி சிக்க முடியவில்லைய என மனதில் நினைத்து புலம்பியபோது உத்தம பக்தனுக்கு அருகில் பளிச்சென ஒளிவட்டம் ஏற்பட்டது. அதில் திருப்பதி வெங்கடாசலபதி சங்கு சக்கரத்துடன் விஸ்வரூபமாய் காட்சி அளித்தார்.

அப்போது பிராமணர் கண்விழித்து எழுந்து அப்பனே! பெருமாளே திருப்பதி ஏழுமலையானே என்று சொல்லி திருவடி வணங்கி யாத்திரையாக புறப்பட்டு சென்றார்.

ராமேஸ்வரம் சென்று புனித நீராடியபின் மீண்டும் வைகை ஆற்றுகரையில் ஓய்வு எடுத்த இடத்தில் திருப்பதி பெருமாள் அருள் ஆசிவழங்கியதை மக்களிடம் திருப்பதி எழுமலையானோ இங்கு தோன்றி நமக்கு காட்சி அளித்து ஆசி வழங்கியதை மக்க ளிடம் தெரிவித்தும் சென்றனர்.

அதைத்தொடர்ந்து பிராமனார்' கூறிய இடத்தில் அப்பகுதியில். பெருமாளுக்கு கோவில் கட்டப்பட்டது. பக்தர் ஒருவர் அப்பனே பெருமாளே என்று கூறியதால் அப்பன் பெருமாள் என்ற திருநாமத்துடன் கோவில் கட்டப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணிகள் தொடங்கி கோவில் புதுபிக் கப்பட்டு கடந்த 2021 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இங்கு நடைபெறும் சித்திரை திருவிழா வில் வீர அழகர் இரண்டு நாள் தங்கி செல்லும் நிகழ்ச்சி மற்றும் சித்திரை திருவிழா நிறைவு அப்பன்பெருமாள் கோவிலில் நடைபெற்று வருகிறது.

கோவில் தூண்களில் பல ஆண்டுகளுக்கு முன்பே பெரு மாளின் வடிவில் ஆஞ்சநேயர் இந்த ஆபூர்வ காட்சி பாது காக்கப்பட்டு வருகிறது.

ஆஞ்சநேயருக்கு தனி சன்னதி, ஹயக்ரீவர் தனி சன்னதி, வைகுண்ட வாசல் என உள்ளது. திருமலை திருப்பதி ஏழுமலை யானை தரிசிக்க செல்ல முடியாதவர்கள் இங்கு சென்று திருப்பதி வெங்கடாஜலபதியை தரிசித்த பலனை பெறலாம் என கூறப்படுகிறது.







# பெருமாள் இருக்கும் இடத்தில் முருகனுக்கு ஒரு படைவீடு



முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதலாவதும் ஆறாவதும் மதுரையில் அமைந்துள்ளது. இதில் ஆறு படை வீடான பழமுதிர்ச்சோலை இருப்பது, அழகர்மலையின் உச்சியில்தான். அறுபடை வீடுகளில் திருவிளையாடல் புரிந்த முருகப்பெருமான், அவ்வையாரின் அகங்காரத்தை போக்கிய தலம் இத்தலம் என புராணக்கதைகள் கூறுகின்றன.

காட்டு வழியாக நடந்து சென்ற அவ்வையாருக்கு நாவல் மரத்தின் கிளையில் ஆடுமேய்க்கும் சிறுவனாக அமர்ந்திருந்த முருகப்பெருமாள், சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என கேட்டு அகந்தையை போக்கியதாககூறப்படுகிறது.

இந்த திருவிளையாடல் நினைவாக சோலை மலை உச்சில் நாவல் மரத்தின் கிளை இன்றும் காணப்படுகிறது.

வள்ளியை திருமணம் செய்ய விநாயகரை யானையாக வந்து உதவும்படி முருகன் அழைத்த தலம் பழமுதிர்ச்சோலை என்றும் கூறப்படுகிறது. பழம் முற்றிய சோலை இது என திருமுருகாற்றுப் படையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இங்குள்ள முருகனுக்கு உகந்த நாளாக வெள்ளிக் கிழமை கருதப்படு கிறது.

அன்றைய தினம் முருக கடவுக்கு தேனும், தினை மாவும் படைக்கப்படுகிறது.

இங்கு கந்த சஷ்டி விழா, தைப்பூசம், வைகாசி விசாகம், கிருத்திகை ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

மாமன் அருகில் மருமகன் முருகருக்கும் அருகே இருக்கும் ஸ்தலங்கள் மதுரை அழகர் மலையாகும்.




பக்தர்களுக்கு அருள்புரிய
வெண்குதிரையேறிவரும்
வீர அழகரே வருக! வருக!!

A.L.S.ராமையாநாடார் - சன்ஸ்
மரம், ஓடு, சிமிண்ட், உரம் வியாபாராம்
236, மெயின்ரோடு, மானாமதுரை

ஸ்ரீ அருணாட்சி அம்மன் பிரிக்ஸ்
உயர்தர சேம்பர் செங்கல்
தயாரிப்பாளர்கள்
செல்: 99946 75130, 94431 68202,
98424 68202, 04574269905



S.நாகராஜ்
தலைவர்,
வீர அழகர் சாரிடபிள் டிரஸ்ட்



S.ராஜேந்திரன்



# 108 திவ்ய தேசங்கள்

108 திவ்ய தேசங்களானது 12ஆழ்வார்களால் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் பாடப்பெற்ற சிறப்புமிக்க விஷ்ணுவின் திருத்தலங்கள் ஆகும். அவற்றை ஒவ்வொன்றாக கீழே பார்ப் போம்

1 திருவரங்கம், திருச்சி (பூலோக வைகுண்டம்)
2 திருக்கோழி, திருஉறையூர் (உறையூர் பகுதி), திருச்சி
3 திருத்தஞ்சை மாமணிக் கோயில், தஞ்சாவூர்
4 அன்பில் சுந்தர்ராஜப்பெருமாள், திருச்சி
5 உத்தமர் கோயில், திருச்சி
6 திருவெள்ளறை, திருச்சி
7 புள்ளபூதங்குடி, கும்பகோணம்
8 கோயிலடி, திருச்சி
9 ஆதனூர் ஆண்டளக்கும் ஐயன் கோயில்,கும்பகோணம்
10 தேரழுந்தூர் ஆமருவியப்பன் கோயில், குத்தாலம்
11 சிறு புலியூர், சீர்காழி
12 திருச்சேறை சாரநாதப்பெருமாள் கோயில், கும்பகோணம்
13 தலைச்சங்காடு, சீர்காழி
14 கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில், கும்பகோணம்
15 கண்டியூர், தஞ்சாவூர்
16 ஒப்பிலியப்பன், கும்பகோணம்
17 திருக்கண்ணபுரம், சீர்காழி
18 திருவாலி, திருநகரி, சீர்காழி
19 நாகப்பட்டினம் (திருநாகை)
20 நாச்சியார்கோயில், கும்பகோணம்
21 நாதன் கோயில்,கும்பகோணம்
22 திருஇந்தளூர், மாயவரம்
23 திருச்சித்ரகூடம், சிதம்பரம், சீர்காழி
24 திருக்காழிச்சீராம விண்ணகரம், சீர்காழி
25 திருக்கூடலூர் (கூடலூர் ஆடுதுறை), கும்பகோணம்
26 திருக்கண்ணங்குடி, சீர்காழி
27 திருக்கண்ணமங்கை, கும்பகோணம்
28 கபிஸ்தலம், கும்பகோணம்
29 திருவெள்ளியங்குடி, கும்பகோணம்

SREE JANAKI TOURS
DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS
SPECIAL CARE FOR SENIOR CITIZEN
NEW 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092 (OPP JAINS KENCES RETREAT)
PHONE: 044 24994450
90942 79625
90942 79626
e-mail: srijanaki.tours@gmail.com
SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
● KOLLUR, UDUPI TOUR ● KERALA TEMPLE TOUR
● SHIRIDI, MANTRALAYAM ● NAVAGRAHA TOUR
● KASI, GAYA, ALLAHABAD & PURI ● AHOBILAM & HILL STATION
ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
● THIRUVANNAMALAI GIRIVALAM ● SRIPURAM GOLDEN TEMPLE
● SURUTAPALLI PRADASHOM ● SAKTHI TOUR
● THENNANGUR ● KANCHIPURAM & BALAJI DARSHAN

30 திருமணிமாடக் கோயில், சீர்காழி
31 வைகுந்த விண்ணகரம், சீர்காழி
32 அரிமேய விண்ணகரம், சீர்காழி
33 திருத்தேவனார்த் தொகை, சீர்காழி
34 வண்புருடோத்தமம், சீர்காழி
35 செம்பொன் செய்கோயில், சீர்காழி
36 திருத்தெற்றியம்பலம், சீர்காழி
37 திருமணிக்கூடம், சீர்காழி
38 திருக்காவளம்பாடி, சீர்காழி
39 திருவெள்ளக்குளம், சீர்காழி
40 திருப்பார்த்தன் பள்ளி, சீர்காழி
41 திருமாலிருஞ்சோலை, மதுரை
42 திருக்கோஷ்டியூர், திருகோஷ்டியூர்
43 திருமெய்யம், புதுக்கோட்டை





44 திருப்புல்லாணி, இராமநாதபுரம்
45 திருத்தண்கால், மதுரை
46 திருமோகூர், மதுரை
47 கூடல் அழகர் கோயில், மதுரை
48 ஆண்டாள் திருக்கோவில், திருவில்லிபுத்தூர்
49 ஆழ்வார்திருநகரி ஆதிநாதன் கோ யில்,திருக்குருகூர், (நவதிருப்பதி) திருநெல்வேலி
50 திருத்துலைவில்லி, மங்கலம் இரட்டைத் திருப்பதி (நவதிருப்பதி) திருநெல்வேலி
51 வானமாமலை, திருநெல்வேலி
52 திருப்புளிங்குடி, (நவதிருப்பதி) திருநெல்வேலி
53 திருப்பேரை, (நவதிருப்பதி) திருநெல்வேலி
54 ஸ்ரீவைகுண்டம், (நவதிருப்பதி) திருநெல்வேலி
55 திருவரகுணமங்கை (நத்தம்), (நவதிருப்பதி) திருநெல்வேலி
56 திருக்குளந்தை, (நவதிருப்பதி) திருநெல்வேலி
57 திருக்குறுங்குடி திருநெல்வேலி
58 திருக்கோளூர், (நவதிருப்பதி) திருநெல்வேலி
59 பத்மநாபசாமி கோயில், திருவனந்தபுரம், கேரளா
60 திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்), கன்னியாகுமரி
61 திருக்காட்கரை, கேரளம்கோட்டயம்
62 திருமூழிக்களம், கேரளம் கோட்டயம்
63 திருப்புலியூர், கேரளம் – கோட்டயம்
64 திருச்செங்குன்றூர், கேரளம் – கோட்டயம்
65 திருநாவாய், கேரளம் – திருச்சூர்
66 திருவல்லவாழ், கேரளம் – கோட்டயம்
67 திருவண்வண்டூர், கேரளம் – கோட்டயம்
68 ஆதிகேசவ பெருமாள், திருவட்டாறு,கன்னியாகுமரி
69 திருவித்துவக்கோடு, கேரளம்திருச்சூர்
70 திருக்கடித்தானம், கேரளம் – கோட்டயம்
71 திருவாறன்விளை, கேரளம் – கோட்டயம்
72 திருவயிந்திபுரம், கடலூர்
73 திருக்கோவலூர், கடலூர்
74 திருக்கச்சி, காஞ்சிபுரம்
75 அட்டபுயக்கரம், காஞ்சிபுரம்
76 திருத்தண்கா(தூப்புல்), காஞ்சிபுரம்
77 திருவேளுக்கை, காஞ்சிபுரம்
78 திருப்பாடகம்கா, காஞ்சிபுரம்
79 திருநீரகம், காஞ்சிபுரம்
80 நிலாத்திங்கள், காஞ்சிபுரம்
81 திரு ஊரகம், காஞ்சிபுரம்
82 திருவெக்கா, காஞ்சிபுரம்
83 திருக்காரகம், காஞ்சிபுரம்
84 திருக்கார்வானம், காஞ்சிபுரம்
85 திருக்கள்வனூர், காஞ்சிபுரம்
86 திருப்பவள வண்ணம், காஞ்சிபுரம்
87 திருப்பரமேச்சுர விண்ணகரம், காஞ்சிபுரம்
88 திருப்புட்குழி, காஞ்சிபுரம்
89 திருநின்றவூர், சென்னை
90 திரு எவ்வுள், சென்னை
91 திருநீர்மலை, சென்னை
92 திருவிடவெந்தை, சென்னை
93 திருக்கடல்மல்லை, சென்னை
94 திருவல்லிக்கேணி, சென்னை
95 திருக்கடிகை (சோளிங்கர்), சென்னை
96 திருவேங்கடம், ஆந்திரம்
97 அகோபிலம் (சிங்கவேள்குன்றம்), ஆந்திரம்
98 திருவயோத்தி, உத்தரப் பிரதேசம்
99 நைமிசாரண்யம், உத்தரப் பிரதேசம்
100 முக்திநாத், நேபாளம்
101 பத்ரிகாச்ரமம், உத்தராகண்ட்
102 தேவப்ரயாகை, உத்தராகண்ட்
103 திருப்பிரிதி, உத்தராகண்ட்
104 திருத்துவாரகை, குஜராத்
105 வடமதுரை, டெல்லி
106 ஆயர்பாடி, டெல்லி
107 திருப்பாற்கடல் (புவியில் இல்லை)
108 பரமபதம் நாதன் திருவடி





# இடதுகையால் வா என்று அழைத்து வலதுகையால் வரம் தரும்

# பூமிநீளா சுந்தரராஜபெருமாள்

சிவகங்கை அருகே வேம்பத்தூர் அருள்மிகு சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில் 1000-2000 வருடங்களுக்கு முன் பழமையான சிவகங்கை 2 கி.மீ மதுரை 46 கி.மீ. மானாமதுரையில் இருந்து 20கிமீ தூரத்தில் உள்ளது.

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் இருந்து திருப்பாச்சேத்தி செல்லும் வழியாக எளிதில் செல்லலாம்.



மூலவர் திருநாமம் பூமிநீளா சுந்தரராஜ பெருமாள் தாயார் திருநாமம் பூமிநீளா தாயார் உற்சவர் ஸ்ரீதேவி பூதேவி

இங்குள்ள பெருமாள், இடது கையால் நம்மை வர வழைத்து வலது கையால் அருள்பாலிக்கிறார். இந்த பெருமாளை, சிற்ப சாஸ்திரம் ஆரம்பிப்பதற்கு முன்பு உள்ள முறைப்படி, உளி கொண்டு செதுக் காமல் கல்லையே கொண்டு செதுக்கி வடிவமைத்து உள்ளார்கள்.

முன்னொரு காலத்தில் குலசேகர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்ட போது, கடும் வறட்சி ஏற்பட்டது. இவன் சோழ இளவரசியைத் திருமணம் செய்திருந்தான். சோழநாட்டில் நீர் நிறைந்து பயிர் விளைந்து செழிப்பாக இருக்கும் பூமியைப் பார்த்து ஆச்சரியப்பட்டான் பாண்டியன். இவன் தன் மாமனாரிடம்,"எங்கள் நாட்டில் ஏற்பட்ட வறட்சி நீங்க என்ன செய்ய வேண்டும்?" என்றான்.

"காசியிலிருந்து 2008 அந்தணர்களை அழைத்து வந்து உன் நாட்டில் யாகம் செய்தால் மழை பொழியும். பயிர் செழிக்கும்" என்றார் சோழன். யாகம் நடத்த 2008 அந்த ணர்கள் குடும்பத்துடன் வந்தனர். யாகம் சிறப்பாக நடந்து மழை பொழிந்தது. விளைச்சல் பெருகியது.

மன்னனுக்கு அளவில்லாத ஆனந்தம். யாகம் செய்த அந்தணர்களுக்கு அவர்களது பெயரிலேயே நிலம் கொடுத்து இங்கேயே தங்க ஏற்பாடு செய்தான். நிலப்பட்டா கொடுக்கும் போது, 2007 அந்தணர்கள் வந்து விட்டனர். 2008வது அந்தணரான கணபதி என்பவரை மட்டும் காணவில்லை. மன்னனுக்கு வருத்தம். என்ன செய்வதென்று தெரியவில்லை. சிறிது நேரத்தில் அந்த முழு முதற்கடவுளான விநாயகரே, அந்தணர் வடிவில் நேரில் வந்து,"நான் தான் கணபதி" என்று கூறி நிலத்தைப் பெற்றுக் கொண்டார். அப்படிப் பெற்றுக்கொண்ட நிலம் தான் வேம்பத்தூர். இந்த கணபதி ஊரின் குளக்கரையில் இன்றும் "2008 கணபதி" என்ற பெயரில் வீற்றிருந்து வேதம் சொல்லி தருவதாக ஐதீகம்.

ஊரின் எல்லையில் 2008 விநாயகர் தனி சன்னதியில் அருள்பாலிக்கிறார். கோயில் பிரகாரத்தில் லட்சுமி நாராயணன், லட்சுமி நரசிம்மர், லட்சுமி ஹயக்கிரீவர், லட்சுமி பூவராகர் சரஸ்வதி அருள்பாலிப்பது மிகவும் சிறப்பு. இப்படி நால்வரும் ஒரே இடத்தில் அருள்பாலிப்பதால் இங்கு வந்து வழிபடுபவர்களது பணக்கஷ்டம் நீங்குவதுடன், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி, பண்டிதராகவும் விளங்கு கிறார்கள்.

கோயிலுக்குள் பிள்ளையார், கருப் பண்ண சுவாமி, கருடாழ்வார், ஆஞ்சநேயர், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக சுந்தரராஜபெருமாளின் பத்து அவதார மூர்த்திகளும் தனித்தனியே அருள்பாலிக் கிறார்கள்.

பதினோறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கவிராஜ பண்டிதர் இந்த பெருமாளை வழிபட்டு ஆதிசங்கரர் இயற்றிய சவுந்தர்யலஹரி மற்றும் ஆனந்த லஹரியைத் தமிழில் மொழி பெயர்த் துள்ளார். அத்துடன் இவர் மானாமதுரை ஆனந்தநாயகி மாலையும், வேம்பத்தூர் வாராஹியின் மேல் புவனாம்பிகை கலை ஞான தீபமும், மேலக் கொடுமனூர் முருகன் மீது ஞான உலாவும் பாடியுள்ளார்.

இவர்கள் தவிர தமிழ்சங்க புலவர்களில் ஒருவரான வேம்பத்தூர் குமரனார் அகநானூறில் 157வது பாடலையும், புறநானூறில் 317–வது பாடலையும், தமிழ்சங்க புலவர்களில் மற்றொருவரான வேம்பத்தூர் கண்ணன் கூத்தனார் குறுந்தொகையில் 362வது பாடலையும், சுந்தராஜ பெருமாளை வழிபட்டு பாடியுள்ளார்கள்.



இங்குள்ள மக்களில் பலர் பண்டிதர்களாகவும், ஆகம சாஸ்திரங்களிலும், மருத்துவத்திலும் வல்லுனர்களாகவும் விளங்குகிறார்கள்.

இத்தலத்து உள்ள பெருமாள் கல்வி, செல்வம் இரண்டிற்குமே அதிபதியாக உள்ளார். கவிச்சக்கரவர்த்தி கம்பரும், காளமேகப்புலவரும் இவரை வணங்கி, தங்களது புலமை மேலும் சிறக்குமாறு வழிபட்டு சென்றுள்ளதற்கான கல்வெட்டு சான்றுகள் உள்ளன. வேம்பத்தூர் பெருமாளின் கருணையால் கவிராஜபண்டிதர் பெற்ற கவித்திறமையை அறிந்த மதுரை மீனாட்சி, பண்டிதர் காசி சென்ற போது அவருக்கு மகளாக இருந்து சேவை புரிந்திருக்கிறாள்.

பல புகழ்பெற்ற கவிஞர்களைப் போலவே, 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிராஜ பண்டிதர், ஆதி சங்கரரின் 'சௌந் தர்ய லஹரி' மற்றும் 'ஆனந்த லஹரி' ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார், இது பலரிடமிருந்து பாராட்டைப் பெற்றது என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

மிகவும் பழங்காலத்து பெருமாளான இவரை வணங்கினால் நாவன்மையும், கவிப்புலமையும் கிடைக்கும்.

குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதற்கு முன்பும், வேதபாடசாலைகளில் சேர்ப்பதற்கு முன்பும், உயர்படிப்பு, மேல்படிப்பு செல்வதற்கு முன்பும் படிப்பிற்கு தகுந்த வேலை கிடைக்கவும் இத்தல பெருமாளை வழிபட்டு செல்வது நல்லது.

பிரார்த்தனை நிறைவேறியதும் பெருமாளுக்கும் தாயாருக்கும் திருமஞ்சனம் செய்து, புது வஸ்திரம் சாத்தி வழிபாடு செய்கின்றனர். வைகுண்ட ஏகாதசி ஆஞ்சநேயர் ஜெயந்தி சிறப்பாகவும் பெருமாளுக்கு உரிய நாட்களில் பூஜைகள் சிறப்பாக நடைபெறுகிறது. தரிசன நேரம் காலை 6 மணி முதல் 11 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும். வரும் 20.06.2024 வியாழக்கிழமை வருஷாபிஷேகம் நடைபெறுகிறது.

ஆலய தொடர்புக்கு 9791583169


வீர அழகரே வருக! வருக!!
அனைவருக்கும் அருள் தருக




இறை பணியில்



யோகி
A.முத்துராமலிங்கம்
செயலாளர்,
பிரஸ் தொண்டு நிறுவனம்,
தலைவர், சோனையா
டிரஸ்ட், மானாமதுரை

மகா மார்க்
பூஜை பொருள்கள்








நயம் கற்பூரம், மூலிகை
சாம்பிராணி பஞ்சகவ்ய விளக்கு
தயாரிப்பாளர்கள்
கோவில்களுக்கு வாங்கி
கொடுப்பவர்கள் அணுகவும்
திரு.M.H.V.S.கிருஷ்ணஐயர்
திருமதி வித்தியா ஹரிஹரஐயர்
செல் 9790325083



# ஆனந்த வாழ்வு தரும்
# ஆனந்தவல்லி அம்மன் சோமநாதர் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை ஆற்றுக்கரையில் அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீஆனந்த வல்லிசோமநாத சுவாமி திருக்கோயில் உள்ளது இக் கோவில் ஆதி காலத்தில் வில்வ வனகாட்டில் இருந்ததால் வில்வ வன ஷேத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்து உள்ளது சந்திர பகவான் தனக்கு தட்சண் இட்ட சாபத்தால் தொழுநோய் ஏற்பட்டு அது நீங்க கோவில் முன் உள்ள சந்திர புன்கரணி தீர்த்தத்தால் நீராடி வில்வ வனகாட்டில் இருந்த அம்மனையும் சிவபெருமானை வணங்கி தொழுநோய் நீங்கியதாகவும் நோய்கள் தீர்ந்து ஆனந்தம் அடைந்ததால் ஆனந்த வல்லியாகவும் சோமநாதராகவும் ஒரு மண்டலம் வணங்கி ஆனந்தம் அடைந்தான் என கூறப்படுகிறது.



பெருங்குளமாக இருந்த புஷ்கரணி தற்போது ஒரு சிறிய கிணறாக உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் ஆட்சி காலத்தில் பின் வைகை ஆறு இங்கு வந்துள்ளது அதேபோல் மலிக் காபூர் படையெடுப்பின் போது நாயக்க வம்சத்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை இங்கு உள்ள வனகாட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து பின் மதுரை சென்றதாகவும் கூறப்படுகிறது.

ராமயன காலத்தில் ராமர் தனது வானர படைகளுடன் இங்கு தங்கி ஆனந்தவல்லி அம்மனையும் சுயம்பு லிங்கமாக உள்ள சோமநாதரை தரிசித்து ராவணனை வென்றதாகவும் கூறப்படுகிறது. மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீசதாசிவ பிரம் மேந்திராள் ஒரே நேரத்தில் மானா மதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் கரூர் மாவட்டம் நெருர் மற்றும் ஓம்கார் காசி கராச்சி ஆகிய இடங்களில் ஓர் ஜோதி வடிவில் ஜுவசமாதி அடைந்ததாக கூறப்படுகிறது .

இங்கு உள்ள ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் சன்னதி முன்பு

மனம் முருகி வேண்டும் போது தீராத நோய்களும் நீங்குவதாக நம்பப்படுகிறது.

மானாமதுரையில் ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் இந்தியாவின் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் மூன்று நாள் இங்கு தங்கி ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் இசை ஆராதனை நடத்தி வழிப்பாட்டடும் செல்கின்றனர்.

மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய சிறப்புகளுடன் துன்பம் நீங்கி நோய்கள் போக்கி ஆனந்த தலமாகவும் இம்மை பயன ளிக்கும் மோகன சுந்தர தலமாகவும் உள்ளது.



பாஞ்சால மன்னர்ஸ்தூல கர்ணன் வில்வக் காட்டை அழித்து பட்டணம் உருவாக்கி வெள்ளை நிறத்தோடு கூடிய சுயம்பு மூர்த்தியாம் சிவலிங்கத்தை வணங்கி ஆலயம் கட்டிய தாக கூறப்படுகிறது. ஆனந்தவல்லி அம்மன் கோபுரம் முன்பு நின்ற நிலையில் உள்ள விநாயகர் தனி சன்னதியும் சூரியன் சந்திரன் கால பைரவர் வள்ளி தெய்வானை சுப்பிரமணிய சுவாமி சன்னதிகளும் உள்ளது வில்வகாட்டில் இருந்ததால் தல விருட்ச மரம் வில்வத்துடன் கூடிய சிவ தலமாக உள்ளது.

ஆண்டு தோறும்மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயில் எப்படி திருவிழா நடைபெறுகிறதோ அதேபோல் இங்கு சித்திரை திருவிழா ஆடித்தபசு நவராத்திரி சதாசிவபேந்திராள் இசை ஆராதனை போன்ற விழாக்கள் நடைபெறுகிறது.

மதுரை மீனாட்சி சுந்த ரேஸ்வரரை பாதுகாத்த வில்வ காடாகவும தொழுநோய் பாதிக்கப்பட்ட சந்திரபகவான் குணமடைந்தாலும் அகத்தி யர் மாணிக்கவாசகர்போன்றோர் வணங்கி ஆனந்தம் அடைந் தாலும் வானர படைகளுக்கு பசி நீங்கியதாலும் ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் ஜூவசமாதி அடைந்து முக்தி பெற்றாலும் அற்புதங்கள் நிறைந்த கோவிலாக ஆனந்தவல்லி சோமநாதசுவாமி திருக்கோயில் உள்ளது. மதுரை இராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகள் தினமும் இங்கு வந்து வழிபட்டு செல் கின்றனர் மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.


ஜெயபால் நர்சிங் ஹோம்

ஜெகன் அவசர சிகிச்சை மையம்

மானாமதுரை, போன்: 04574-268614, 268615



சிறப்பு சிகிச்சைகள்

●வயிறு ஸ்கேன் ●எக்ஸ்ரே ●இசிஜி ●இருதயம் மற்றும் இரத்த ஓட்டம் அறிய ஸ்கேன் ●அனைத்து பரிசோதனையும் செய்யக்கூடிய கம்ப்யூட்டர் மருத்தவ அய்வுக்கூடம் ●கருவில் இருக்கும் குழந்தையின் துடிப்பை அறியும் கருவி ●பொதுமருத்துவம் ●தீவிர கண்காணிப்பு அவசர சிகிச்சை பிரிவு ●முடநீக்யில் பயிற்சி வசதி ●மூச்சு திறன் பரிசோதனை கருவி ●செயற்கை சுவாசக்கருவி ●மருந்தகம் ●முழுவசதியுடன் கூடிய பிரசவ அறை ●தடுப்பு ஊசிமையம்●முழு உடல் பரிசோதனை வசதி

●25 படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனை ●மைய ஆக்ஸிசன் வசதி ●சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ●24 மணிநேர ஜெனரேட்டர் உடன் கூடிய மின்சார வசதி ●24 மணிநேர ஆப்புலன் வசதி



Dr.S.ஜெயபாலன்
MBBS,FCGP,



Dr.J.ஜெகன்
MD., Dip.,AXE, Dip Diabetogy

Dr.J.ஆரத்தி
M.B.B.S., DGO.,

ஆம்புலன்ஸ் சேவை
96555 68615

ஜெயபால் நர்சிங் ஹோம்

ஜெகன் அவசர சிகிச்சை மையம்

மானாமதுரை.











# வரம் தரும் வீர அழகர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வீர அழகர் கோவில் உள்ளது.

வைகை ஆற்று தென்கிழக்கில் உள்ள இக்கோவிலில் ஸ்ரீசுந்தரராஜபெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இங்கு ராமபிரானால் மகுடம் சூட்டப்பட்ட வீர ஆஞ்சநேயர், தாயார்சன்னதியும் உள்ளது.

கோபுரம் முன்பு பதினெட்டுபடி கருப்பன், ராக்கச்சி அம்மன் தனிகோவில் உள்ளது. வீரஅழகர் ஆற்றில் இறங்குவதற்கு முன்பு பூபல்லாக்கில் கள்ள ழகர் திருக்கோலத்துடன் சென்று இறங்கும் முன்பு அலங்கார பிரியரான சுந்தரராஜ பெருமாளுக்கு தியாக விநோத பெருமாள் கோவிலில் சிறப்பு அலங்காரம் செய்யப்படும்.

வெள்ளை குதிரை வாகனத்தை அலங் கரித்து வீர அழகருக்கு வெண்

மஞ்சள் பட்டு உடுத்திபச்சை வஸ்திரம் சாத்தி வேல் கம்புடன் கம்பீரமாக எழுந்தருளி வைகை ஆற்றில் இறங்குவார். ஆண்டுதோறும் நல்ல மழை பெய்து நல்ல விளைச் சலை தருவதற்கும் மக்களின் வாழ்வு மங்களகரமாக இருக்கும் வகையில் வீரஅழகர் வெண் மஞ்சள் பட்டு பச்சை வஸ்திரம் உடுத்தி வீதி உலா வந்து வெற்றி தரும் வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்குகிறார் என பக்தர்களால் நம்பப்பட்டு வருகிறது.

வைகை ஆற்று கரையில் இருபுறங்களிலும் ஸ்ரீஆனந்தவல்லி சோமநாத சுவாமி கோவில் வீரஅழகர் கோவில், அப்பன் பெருமாள் கோவில் இங்கு மட்டும் உள்ளது. மானாமதுரையில் ஆண்டு தோறும் நடைபெறும் பெரிய திருவிழாவாக சித்திரை திருவிழா மட்டுமே உள்ளது. ஆற்றில் இறங்கிய மறுநாள் இரவு மீண்டும் ஆற்றுக்குள் நிலாசோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் வீர அழகரை தரிசித்து வீட்டில் இருந்து சமைத்து எடுத்து வரபட்ட உணவு வகைகளை பக்தர்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக பௌர்ணமி நிலவு ஒளியில் சாப்பிடுவார்கள். தமிழகத்தில் இங்கு மட்டும் வீர அழகருடன் பக்தர்கள் உணவு அருந்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.







# வானரவீரர்களுக்கு வீரம் கொடுத்த ராமன்

ராமாயண காலத்தில் ராமபிரான் இலங்கை சென்று போரிட வானர படை களை அனுமன் தலைமையில் தயார் செய்து அனுப்பிய போது பிருந்தாவன காட்டில் வந்த வானர படைகள் அங்கு உள்ள பழங்கள் மற்றும் இயற்கை உணவுகளை உண்டு மயங்கின.

இலங்கை சென்று போரிடுவதை மறந்து காட்டில் மயங்கி இருந்த போது அங்கு வந்த ராமபிரான் வான படைகளுக்கு எதற்காக நாம் வந்தோமோ அதை மறக்க கூடாது.

செய்கின்ற பணிகளை கவனமுடன் பல கஷ்டங்கள் வந்தாலும் கடமையை முடித்து காட்ட வேண்டும் என உப தேசம் செய்தார்.

ராமரின் உபதேசத்தை வானர படைகள் தலைவணங்கி ஏற்று கொண்டு ஒற்றுமை யுடன் அனுமன் தலைமையில் இலங்கை செல்ல கடலில் பாலம் அமைத்து சென்று போரில் வென்று சீதையயை மீட்டு மீண்டும் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறகூடாது.

என அனுமனுக்கு ஆசி வழங்கி மகுடம் சூட்டியதாக கூறப்படுகிறது. அதன் நினைவாக மாவலி மன்னர் வீர அழகர் கோவிலை மானா மதுரை வைகைஆற்றில் கட்டி அதில் வீர ஆஞ்சநேயர் தனிசன்னதியும் அமைத் தார்.

வானர படைகள் இங்கு வீரம்பெற்றதால் வானர வீர மதுரையாக இருந்து பின் மருவி மானாமதுரை என அழைக்கபடுகிறது. ராமர், அனுமார் பாதம் பட்ட பகுதியாக மானாமதுரை உள்ளது. வானர படைகள் பழங்கள் உண்டு மயங்கிய பிருந்தாவனம் தற்போது அதே பெயரில் பிருந்தாவன தெருவாக தற்போது உள்ளது.

வானரர்கள் இங்கு வீரபெற்றதால் வீர ஆஞ்சநேயர், ஜெயவீர ஆஞ்சநேயர் என மானாமதுரை ரயில் நலையத்தில் தொடங்கி வைகை கரையோரம் வரை ஏராள மான அனுமன் கோவிலாக மானாமதுரை யில் இப்போது கணலாம்.

ராமர் சென்ற காலடி முழுவதும் இலங்கை வரை இப்போதும் ராமர் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ளது. மானாமதுரையில் வீர ஆஞ்சநேயராகவும், குறிச்சியில் காசிஅனுமராகவும் பக்தர்களால் வணங்கபட்டு வருகிறது.




# மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் வழங்கும் மதுரைகள்ளழகர்



பிரசித்திபெற்ற அழகர்மலை உச்சியில் உள்ள நூபுரகங்கை தீர்த்தம் பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இங்கு ஒரு காலத்தில் சுதபஸ் என்ற முனிவர் நூபுரகங்கை தீர்த்தத்தில் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது துர்வாச மாமுனிவர் தனது சீடர்களுடன் அங்கு நீராட வந்தார்.

ஏற்கனவே நீராடிக் கொண்டிருந்த சுதபஸ் முனிவர் வந்தவர்களை கவனிக்காமல் நீராடி முடித்து பின்னர் துர்வாச முனிவரை வரவேற்றார். இதனால் சினம் கொண்ட துர்வாச முனிவர், சுதபஸ் முனிவரை பார்த்து மண்டுகமாகி (தவளை) போவாயாக என்று சாபமிட்டார்.

சுதபஸ் முனிவர் தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டு சாபவிமோசனம் கேட்டார். அதற்கு துர்வாச முனிவர் சித்திரை மாதம் பவுர்ணமி நிறைநாள் (சித்ரா பவுர்ணமி) தினத்திற்கு மறுநாள் வரும் கிருஷ்ணபட்ஷபிரதமை திதியில் கள்ளழகர் சுந்தரராஜபெருமாள் உமக்கு சாபவிமோசனம் அளிப்பார் என்று கூறிவிட்டு அங்கிருந்து போய்விட்டார். அதன்படி சாபத்தால் தவளையாக மாறிய சுதபஸ் முனிவர், கள்ளழகரை நினைத்து வைகை ஆற்றில் தவமிருந்தார். தவத்திற்கு மனமிறங்கிய அழகர் மதுரை வைகை ஆற்றில் இறங்கி மண்டுக மகரிஷிக்கு (சுதபஸ்முனிவர்) கருட வாகனத்தில் எழுந்தருளி சாபவிமோசனம் அளித்ததாக ஸ்தல புராண வரலாறு கூறுகிறது.

# நோய்களை தீர்க்கும் நூபுர கங்கை தீர்த்தம்



அழகர்மலை உச்சியில் உள்ள நூபுர கங்கையை சுமார் 3 மணி தூரம் நடந்து செ ன்றால் அந்த அபூர்வ அதிசய கங்கை தீர்த்தத்தை காணலாம். இந்த தீர்த்தம் திருமாலுடைய திருவடி சிலம்பில் இருந்து உற்பத்தியாகி பெருகி வழியும் தனி பெருமையுடையது. மகாபலிசக்கரவர்த்தியிடம் வாமன அவதாரம் எடுத்த பெருமாள் மூன்றடி மண் கேட்டார். அவரும் தந்தேன் என்றார். உடனே வாமனர் விசுவரூபம் எடுத்து மூன்று உலகங்களையும் தனது திருவடிகளால் அளந்தார், மூன்றாவது அடி இடத்தை எங்கே அளந்துகொள்வது என்று வாமனரை பார்த்து பெருமாள் வினவினார்.

அதற்கு தனது சிரத்தை வாமனர் காட்டினார். தனது திருப்பாதத்தை வைத்து வாமனரை அதல பாதாளத்

தில் அமிழ்த்தி விட்டார். பெருமாள். இந்த பிரமாண்ட மான அவதாரத்திற்கு திருவிக்கிரம அவதாரம் என்று பெயர். இதில் பெருமாள் முதலடியை மண்ணில் வைத்துவிட்டு இரண்டாவது அடியை விண்ணில் வைக்க தனது திருப்பாதத்தை ஆகாயத்தில் உயர்த்திய போது அங்கிருந்த பிரம்மா, தனது தந்தையின் பாதம் என்பதை அறிந்து தனது கமண்டல நீரினால் பூஜை செய்தார்.

அப்போது பகவானின் பாதங்களிலிருந்து பொற்சிலம்பு அசைந்து அதிலிருந்த நீர்துளிகள் அழகர்மலை மீது விழ அதுவே சிலம்பாறாக பெருக்கெடுத்து இன்று ஓடி வருகிறது. இரும்பு சத்து.

தாமிரசத்து, மூலிகைசத்து உள்ளிட்ட பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்த அபூர்வ தீர்த்தம் இது ஆகும்.

# வேண்டுதல் நிறைவேற அனுமனிடம் கடிதம் தரும் பக்தர்கள்







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சுந்தரபுரம் தெருவில் உள்ள சுந்தரவிநாயகர் கோவிலில் மூல நட்சத்திரத்தன்று அனுமன் உருவப்படம் வைக்கப்பட்டு வடைமாலை சாத்தப்பட்டு பூஜைகள் நடைபெறும்.

பூஜை தொடங்கும் நேரமான மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை மாணவ–மாணவிகள், ஆண், பெண், என ஏராளமான பக்தர்கள் கடிதம் எழுதிய கவர் தரு கின்றனர். அந்த கடிதங்களை அனுமன் உருவப்படத் திற்கு முன்பு வைத்து பூஜை செய்து அங்கே வைத்து விடுகின்றனர்.

கடிதம் கொடுத்த பக்தர்கள் அடுத்த முறை வந்து கடிதத்தில் எழுதிய கோரிக்கை நிறைவேறிவிட்டது என்று கூறி பூஜை செய்கின்றனர். கோரிக்கை நிறைவேறிய கடிதங்கள் உருவப்படத்தில் இருந்து எடுக்கப்பட்டு தனி பையில் சேகரிக்கப்பட்டு கோவிலில் வைக்கப் பட்டுள்ளது.

இந்த கோவிலில் சங்கடஹர சதுர்த்தி, பவுர்ணமி பூஜை மூல நட்சத்திரம் உள்ளிட்ட விஷேசங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மூல நட்சத்திரத்தன்று அனுமனிடம் கடிதம் கொடுக்க ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

இது பற்றி கோவிலை பராமரித்து வரும் முன்னாள் ராணுவ வீரர், பிரசாத், தமிழரசி தம்பதியினர் கூறும்போது,

மூலம் நட்சத்திரத்தன்று அனுமனுக்கு பலர் கடிதம் தருகின்றனர். சில நாட்களில் கோரிக்கை நிறைவேறி விட்டது என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். அனுமன் உருவப்படத்திற்கு முன்பு பூஜை செய்யப்படுகிறது.

கடிதங்கள் பிரிக்கப்படுவது கிடையாது. அனுப்புனர் கொடுக்கும் முகவரியும், பெறுநர் பகுதியில் வீர அனுமான், சுந்தரவிநாயகர் திருக்கோவில் சுந்தரபுரம் மானாமதுரை என்றுதான் கொடுப்பார்கள்.

அதில் நாங்கள் செந்தூரம் வைத்து அனுமன் உருவப் படத்திற்கு முன்வைத்து விடுவோம்.

இப்படி வேண்டுதல் மூலம் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு. திருமணம், நோய்குணமாகுதல் போன்ற பல கோரிக்கைகள் நிறைவேறியுள்ளன என கூறினர் தற்போது கோவில் கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் நடைபெற உள்ளது பக்தர்கள் நிதி உதவியாகவோ பொருளுதவியாகவோ தரலாம். தொடர்புக்கு 94435 02417




அருள்மிகு
ஸ்ரீசுந்தர விநாயகர் ஆலயம்
சுந்தரபுர அக்ரஹாரம்
மானாமதுரை



மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு அபிஷேகம் பூஜை.
தேய்பிறை அஷ்டமி பைரவர் வழிபாடு.
மூலம் நட்சத்திரநாளில் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு சிறப்பு பூஜை.
தைவெள்ளி, ஆடி வெள்ளியில் திருவிளக்கு பூஜை வழிபாடு

பக்தர்கள் சுந்தரவிநாயகரை வழிபட்டு வாழ்வில் வளம்பெற அன்புடன் அழைக்கிறோம்.



S.இராஜேந்திர பிரசாத் - தமிழரசி
நிர்வாகி மற்றும் பக்தர்கள், விழா குழுவினர், மானாமதுரை.

# SCHOOL OF ALLIED HEALTH SCIENCES

**Vinayaka Mission's Research Foundation - Deemed To Be University**

(Declared Under Section 3 of the UGC Act, 1956) (Accredited by NAAC 'A' Grade)

https://fahs.ac.in/apply

The Allied Health Science Institute to have....

- Received QCI approved ISO 21001:2018 by TUV SUD
- AERB Approved UG, PG & Diploma in Radiography Courses
- Received QCI approved WASH Certification by TUV SUD

# NO NEET REQUIRED



## COURSES OFFERED @ SAHS

## UG Courses

**3 Years + 1 year Internship** | **Eligibility : +2 PCBM, PCBZ, PCB**

- B.Sc Anaesthesia Technology
- B.Sc Renal Dialysis Technology
- B.Sc Operation Theatre Technology
- B.Sc Trauma Care Management
- B.Sc Medical Lab Technology
- B.Sc Radiology and Imaging Technology
- B.Sc Physician Assistant
- B.Sc Cardiac Technology
- B.Sc Perfusion Technology
- B.Sc Neuroscience Technology

21 YEARS OF Excellence in Education

**Eligibility : +2 PCBM/PCBZ/PCB/PCMCS**

- B.Optometry
- B.Sc Forensic Science Technology

## Master Program

**2 Years**

- M.Sc Renal Dialysis Technology
- M.Sc Physician Assistant

  **Eligibility :** B.Sc AHS / B.Sc Nursing

- Master of Optometry

  **Eligibility :** B.Optometry

- M.Sc Cardiac Cath & Interventional Technology
- Master of Public Health

  Eligibility : Bachelor Degree in MBBS / Ayush / Pharmacy / Physiotherapy / Occupational Therapy / Dentistry / Nursing / Veterinary Sciences / Allied Health Sciences / Life Sciences / B.Sc Botany & Zoology

- M.Sc Perfusion Technology

  Eligibility : B.Sc in Perfusion Technology (3 Year + 1 Year Internship) / B.Sc Cardiac vascular Technology

- M.Sc Echocardiography
- M.Sc Anaesthesia Technology
- M.Sc Neuroscience Technology
- M.Sc Forensic Science Technology
- M.Sc Radiology & Imaging Technology

  **Eligibility :** B.Sc AHS

- M.Sc Medical Lab Technology

  Eligibility : Bachelor Degree in MLT / Biochemistry / Microbiology / Biotechnology / B.Sc. Chemistry (with ancillary subject of Biochemistry and Microbiology) Genetics degree

- M.Sc Trauma Care Management

  Eligibility : B.Sc Trauma Care Management / Emergency and Trauma Care Technology / BPT / B.Sc Nursing

## Diploma Courses

**2 Years** | **Eligibility : 10th*/+2 with Science Stream**

- Diploma in Radiology & Imaging Technology
- Diploma in Medical Lab Technology
- Diploma in Operation Theatre & Anaesthesia Technology*

| Salem | Puducherry | Chennai |
|---|---|---|
| VIMS Hospital Campus | Aarupadai Veedu Medical College & Hospital Campus | Aarupadai Veedu Institute of Technology Campus |
| Mob : 7094450128<br>9159999572 | Mob : 9787136328<br>9750980225 | Mob : 8124648205<br>9159999572 |

**TOLL FREE : 18003093332**

aanmeegamalar.com

aanmeegamalar.com

# ADMISSION OPEN 2024-25

## School of Rehabilitation and Behavioral Sciences Puducherry

SRBS

World Health Organization · World Hearing Forum · National Digital Library of India

### Programmes Offered

**Undergraduate Programme**

- Bachelor in Audiology and Speech-Language Pathology

**Postgraduate Programme**

- Master of Science (Audiology)
- Master of Science (Speech-Language Pathology)
- Master of Science (Clinical Psychology)
- Master of Philosophy (Clinical Psychology)
- Post Graduate Diploma in Early Intervention



To apply online

www.daslpvmrf.edu.in

## VINAYAKA MISSION'S COLLEGE OF NURSING, PUDUCHERRY

VMCON

( An Constituent College of Vinayaka Mission's Research Foundation )

### Programmes Offered

**Undergraduate Programme**

- B.Sc. (Nursing) - Bachelor of Science in Nursing
- P.B.B.Sc. (Nursing) - Post Basic Bachelor of Science in Nursing

Scan here for Website

ISO · National Digital Library of India · NPTEL Local Chapter · swayam · WASH

**Postgraduate Programme**

- M.Sc. (Nursing) - Master of Science in Nursing



www.vmcnpdy.edu.in

## School of Physiotherapy

VMRF

### Programmes Offered

**Undergraduate Programme**

- B.P.T. - Bachelor of Physiotherapy

**Postgraduate Programme**

- M.P.T. - Musculoskeletal and Sports Physiotherapy
- M.P.T. - Neurological Physiotherapy
- M.P.T. - Cardio- Respiratory Physiotherapy
- M.P.T. - Pediatric Physiotherapy
- M.P.T. - Obstetrics and Gynaecological Physiotherapy
- M.P.T. - Community Physiotherapy

ISO · National Digital Library of India · NPTEL Local Chapter · swayam · WASH



Scan here for Website

www.sptvmrf.edu.in

## VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION

Deemed to be University under section 3 of the UGC Act 1956

VISION • WISDOM • UNITY

A GRADE — Accredited with 'A' Grade by NAAC

**Admission office :** Vinayaka Mission's Research Foundation, Aarupadai Veedu Medical College and Hospital Campus Pondy Cuddalore Main road Kirumampakkam, Puducherry - 607403

nirf NATIONAL INSTITUTIONAL RANKING FRAMEWORK · AISHE ALL INDIA SURVEY ON HIGHER EDUCATION · NABH

admission.pondy@avmc.edu.in

+91 96290 70444